௧

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமயிலை நான்மணிமாலை.

மயிலை. சீனி. கோவிந்தராசன் கோத்தது.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

சென்னை

கணேச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1918.

சிவமயம்.

# முகவுரை.

நான்மணிமாலை என்பது தமிழ்ப் பிரபந்தவகை தொண்ணூற்றறுனுள் ஒன்றாம். இது, நால்வகை மணிகொண்டு நிரல்படக் கோத்த மாலைபோன்று, நால்வகைப் பாக்களை நிரல்பட வைத்து யாத்த நூலிற்கு ஆகுபெயரால் பெயராயிற்று. இதன் இலக்கணம்:—

" வெண்பா கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தா தியினாற் புதுபெறின்
நான்மணி மாலை ஆமென நவில்வர் "—(பாட். - 61) என்பது இலக்கணவிளக்கம் கூறும்.

மயிலை என்பது மயிலாப்பூரின் மரூஉமொழி. மயிலாப்பூர், தொண்டைநாட்டிலே பாடல்பெற்ற திருப்பதிகளுள்ளே ஒன்று. வடக்கில் திருவொற்றியூரையும் தெற்கில் திருவான்மியூரையும் பெற்றுள்ளது. உமாதேவியார் மயிலுருவாக இருந்து உமாபதியாரைப் பூசித்ததும், சமயாசாரியரான திருஞான சம்பந்தசுவாமிகள் தேவாரமோதி அங்கம்பூம்பாவையாய் ஆக்கியருளியதும், வாயிலாநாயனார் திருப்பணி புரிந்தருளியதும், திருவள்ளுவநாயனார் திருவவதாரம் செய்ததுமாகிய மேம்பாடு மேவியது. மேலும், பிரமன், சுக்கிரன் வாலி, இராமசந்திரன் முதலானோர்களால் வழிபடப்பட்டது.

இந்நகரிடத்தே சிவபிரான், விநாயகர், திருமால், பிடாரி இவர்களுக்கு எவ்வேழு கோயில்கள் தனித்தனி உள்ளன; அன்றியும் கொல்லை, குளம், குட்டை, முதலியவும் ஏழாக எடுத்துள்ளன. இதற்

குக் காரணம் கேட்போமாயின், சத்தபுரி என்று சொல்லப்படும் காசி, காஞ்சி, அயோத்தி, அவந்திகை, மதுரை, மாயை, துவாரகை என்னும் தலத்தில் நாம் யாத்திரைசென்று எய்தும் பேறெல்லாம் இம் மயிலைப்பதி ஒன்றிலே ஒருங்கே எய்தும்படி அமைக்கப்பட்டுள்ளன என்பர் ஆன்றோர்; "இவர்காசியினும் வீசம் அதிகம்" என்று மயிலைச் சிறப்பினைச் சுருக்கமாகச் சொல்லிப் புகழ்வர்.

## திருமயிலையில் கோயில்கொண்டெழுந்தருளிய கடவுளர் முதலியோர் பெயர்கள்.

1. சுவாமி :—காபாலீசுரர்.
2. அம்மையார் :—கற்பகவல்லி.
3. கணபதி :—கூத்தாடும் விநாயகர்.
4. குமரக்கடவுள் :—சிங்காரவேலர்.
5. தலம் :—(மயிலாபுரி, மயூராபுரி, வேதபுரி, சுக்கிரபுரி) மயிலாப்பூர்.
6. தீர்த்தம் :—முத்திதீர்த்தம்.
7. தலவிருட்சம் :—புன்னைமரம்.
8. வாயில் :—மேற்கு நோக்கியது.
9. விழாநாள் :—பங்குனி உத்தரம்.

## திருமயிலையைப் பாடிய பிரபந்தங்கள்

1. தேவாரம்
2. பதினொன்றும் திருமுறை.
3. பெரியபுராணம்.
4. நாலாயிரம், முதலியன.

## திருமயிலையைப்பற்றிய நூல்கள்.

1. திருமயிலைத் தலபுராணம்.
2. திருமயிலைக் கலம்பகம்.
3. திருமயிலை உலா.
4. திருமயிலை உவமை வெண்பா.
5. திருமயிலை யமகவந்தாதி.
6. சிங்காரவேலர் கோவை.
7. சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ்.

இவற்றுள் முன்னைய மூன்றும் அச்சிட்டுள்ளன. ஏனைய யாவும் கையெழுத்துப் பிரதியாக என்னிடம் இருக்கின்றன. இவ்வேழு புத்தகத்தையும் ஒருங்கே சேர்த்துத் 'திருமயிலைப் பிரபந்தத்திரட்டு' எனப் பேரிட்டு வெளியாக்க வேணவா எனக்கிருந்தும் பொருட்குறைபாட்டினால், அது இன்னும் கடைபோகாதாயிற்று. திருவருள் கைகூட்டுக !

இந் 'நான்மணிமாலை', [illegible] நேரிசை இன்னிசை வெண்பாக்களும் ; திலதமும், திலதப் போலிகளும் ; கழி நெடில் அடி விருத்தங்களும் ; நேரிசை, நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம், இணைக்குறள் ஆசிரியப்பாக்களும் விரவிவரத் தொடுக்கப்பட்டதுமன்றி ; சித்தாந்த சாத்திரத்திற் சிறிதும் முரணுமலும், அகப்பொருள் துறைகள் அமைந்தும், இலக்கணவரம்பு கடவாமல் இயன்றுமுளதாகலின், முற்றக் கற்ற மூதறிவாளருக்கு இச்சிறுநூலை என் சிறு விருந்தாக அளிக்கின்றனன் ; அவர், இதன்கண் உளவாகும் குணங்கொண்டு குற்றங்கள் நீக்கி, அடியேனைக் கோதாட்டுவாராக !

திருமயிலை, சென்னை,
பிங்கள௵ தை௴

மயிலை - சீனி - கோவிந்தராஜன்.

# சிறப்புப்பாயிரம்.

சித்தாந்த சரபம் - அஷ்டாவதானம்,
சிவ ஸ்ரீ - கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள்
இயற்றியது.

மன்னியநால் வகைநறவு சொட்டுஞ்சொன் மலர்களினை மனத்தெடுத்துத், துன்னியநான் மணிமாலை யாத்தொடுத்து மயிலைநகர்த் தூயோனை, முன்னவன்ற னிணையடிக்கீழ் சாத்தினன்செந் தமிழ்நூல்கண் முற்றுந் தேர்ந்த, பன்னரிய விற்பனனும் கோவிந்த ராஜனென்னும் பாவலோனே.

வைதிக சைவ சித்தாந்த பிரசங்க ரத்நாகரம்
ஸ்ரீமத் - கா - ஏ - ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள்
இயற்றியது.

கற்பகவல் லியைப்பிரியா துயர்மயிலைப புன்னையின்கீழ் களித்து வாழுந், தற்பரற்கு நான்மணிமாலைப்பனுவல் சுவையனைத்துந் தழங்கச் சொற்றான், பொற்பமரு மிலக்கியவி லக்கணநூ னனிதேர்ந்த புலமை மிக்கான், எற்கினியன் கோவிந்த ராஜனெனு மெழிற்கவிஞ னெழின்மையோனே.

திரிச்சிராபபள்ளி S. P. G. காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமான் - அமிர்தம் - சுந்தரநாதம்பிள்ளை அவர்கள்
இயற்றியது.

கற்றறிந்தா ருளங்களித்துக் கொண்டாருந் திருமயிலைக் கடவுட்கன்பான், முற்றறிந்தா முளத்துடனே நான்மணிமாலைப்பனுவன் மொழிந்தா னின்பான், உற்றறிந்தா ரிதுதமிழின் வைப்பென்ப ரையமில்லை யுரைத்தோ னெங்கள், பற்றறிந்தா ரியன்மொழிச்சொல் கோவிந்த ராஜனெனும் பண்பன் மாதோ.

"கலா சிந்தாமணி" பத்திராதிபர்

ஸ்ரீமான், ம-க-மாணிக்கவேல் முதலியார் அவர்கள்

இயற்றியது.

பரிதி வானவன் பற்றிசை பாங்குற
வேர்பு வடவரை யேனைத் திரிதரல்
செய்தாங் கிந்திர திசையிற் றோன்றி
யுலகுக் குறுதிற னுஞற்றுங் காட்சியா
லெந்நா வலரு நன்னா வலரக்
குன்றை நகரான் கூற்றுஞ் சீர்சா
னன்னாட் டொன்று முன்னாட் டணிகிளர்
மயிலை நகரான் மகிழ்தமி ணாவலன்
கற்க கசடறக் கற்பவை யெனுநெறி
அற்பி னாய்வழி யந்நிலை களவிய
யதனுறு மந்தண மிறப வாய்ந்தோன்
கோவிந்த ராஜனெனங் குருமணி யானோன்
தன்னெஞ் சுரையெனத் தக்கோர் மகிழ
வன்னெஞ் சார்க்கும் புன்னெறி யகல
எத்துணைப் பொருளும் இத்தமிழ்க் காட்டி
யையா யிரத்தொ டைம்மூன் றிரண்டும
வைகலி யனலம் வருமாங் கிலத்தின்
ஆயிரத் துத்தொள் ளாயிரப பின்னேழ்
எனவிரு கடையு மிசைதரப் பெறூஉம்
ஐந்தாம் ஜார்ஜர சாளு நாளின்
முந்து மீனமு முறைமார்ச்சு மாமதி
எம்மை யாளு மெம்பெரு மான்கபா
லீச்சுர நாமத் திறையமர் நகரா
மயிலை நான்மணி மாலை யென்பேர்
இயல வோர்நூ லிசைமாண் பதுவே.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| **5** | 16 | வாறி | வாரி |
| 14 | 1 | நஞுசம் | நஞ்சம் |
| 16 | 6 | உடுத்தார் | உடுத்தாய் |
| 17 | 21 | தருவ | ஒருவ |
| ,, | 22 | நாயேன் | நாயேம் |
| 21 | 26 | பேதையா | பேதையர் |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமயிலை நான்மணிமாலை.

## காப்பு.

### வெண்பா.

மட்டிட்ட புன்னை மணமார் மயிலையெம்மான்
எட்டிட்ட தோளான் இணையடிக்குப்—பெட்டிட்ட
நான்மணிமா லைக்கோர் நடம்பயிலும் போதகமே
வான்பொருளை நல்கிவிடும் வந்து.

மட்டிட்டபுன்னை - ஆன்றோர் வாய்மொழி போற்றல். புன்னை-தலவிருட்சம்; நெய்தல் நிலக்கருப்பொருள். நடம்பயிலும் போதகம் - கூத்தாடும் விநாயகர்; இவர் தல விநாயகர். போதகமாகையின் நடம் பயிலுகின்றது என்பது நயம். வான்பொருள் - அரியபொருள். வந்து-முன்நின்று. நல்கிவிடும் - அருளும்: ஒருசொல். விடும் - துணிவு.

எட்டிட்ட தோளான் - அவன் எண்டோளுக்குமின்றி இணையடிக்கே மாலைசூட்டுதல் எமது கருத்துஎன்பது காட்டிற்று.

## நூல்.

### வெண்பா.

திருத்தங்கு மாமயிலைத் தேவனே! நாயேன்
கருத்தங்கு நீவாழ்தல் காணேன்—செருத்தங்கு
வானக் குறைமதியன் வாட்டுகின்றான் சார்கொன்றைக்
கானத்தார் தந்தென்னைக் கா.

மாலையிரத்தல். ஈண்டு, பாட்டுடைத் தலைவனை கிளவித் தலைவனாக வந்தமை காண்க.

குறை மதியன் - பிறைச்சந்திரன் ; அறிவிலி என்றோர் வைதற் பொருளும் பயக்கும். (க)

கலித்துறை.

காவும் சிவிகையும் கால்வன் புரவியும் காவலரும்
ஏவும் சிறிய ரெனப்படைத் தோரும் எழினலத்தால்
தேவும் சிறிய னெனத்திகழ்ந் தோரும் திருமயிலை
மேவும் சிவன்கழல் மேவா ரெனிற்சில மெல்லியரே.

பொன்னுடையரேனும் பொலிவுடையரேனும் சிவன் கழல் சேராரெனில் சிறியரே என்க. ஏவும் சிறியர்-ஏவலாளர். தே-காமன். சிறியன் - அழகிற் குறைந்தோன். (உ)

விருத்தம்.

மெல்லியல் பாகத் தானே! மேருவில் மேவார்க் காக
வில்லியல் விளைவித் தானே! வித்தகா! மயிலைத்தேவே!
நல்லியல் பில்லா நாயேன் நவைபடு சொல்லுங் கொண்டென்
கல்லியல் கனியச் செய்துன் கருணைத்தேன் ஊட்டலாமோ?

வில்லின் இயலை மேருவினிடத்து விளைவித்தானே என்க. (ரு)

ஆசிரியப்பா.

ஆமா றேதத அறியேன் நாயேன் ;
தேமா மட்டும் தேம்படு பிழியும்
கதலிக் கனியின் இதமலி தேனும்
கரும்பின் இனிமை விரும்புறு தேறலும்

பலவின் சுவையும் மலரின் மணமும்
பாவின் பண்பும் பாகின் தெளிவும்
நூலின் நயமும் நுண்ணிதின் வடித்து
உள்ளம் குழைத்தே ஊற்றெழு காதல்
வெள்ளம் குழைத்தே மேவுறக் கலந்து
தெள்ளிய மென்மைத் தென்தமிழ்க் கொண்டு
ஒள்ளிய கோவையும் ஒப்பில் வாசகமும்
வாதவூர் வந்த மேதகு மாமணி
போதவூர் போந்த வேதியர் பெருமான்
ஊட்டிய அமுதம் உண்டநின் செவிகள்
கோட்டியும் பாட்டும் அறியாக் கொடியேன்
கற்றவர் வழூஉவெனக் காட்டிய பத்துக்
குற்றமும் குழுவக் குரைத்திடும் சொல்லையும்
கொன்றையும் மத்தமும் கூவிளம் தாளியும்
ஒன்றெனக் கொண்டே உவப்பான் ! ஊர்திரை
தவழ்ந்து பவளமும் தரளமும் சொரியும்
நிவந்தமா மயிலை அமர்ந்தஎம் பெருமான் !
ஏற்றிடும் என்பதும் வழக்கே
போற்றியில் உள்ளம் போத உண்டே.

உவப்பான் ! எம்பெருமான் ! (நினக்குப்) போற்றியில் உள்ளம் போத உண்டு. (ஆகையின்) கொடியேன் குரைத்திடும் சொல்லையும் நின்செவிகள் ஏற்றிடும் என்பதும் வழக்கே என்க. (௩)

வெண்பா.

ஏவுண்டு மாரனலர் ஏறுண்டு மாதரலர்
நோவுண்டு நான்வாழ்தல் நோக்கிலையே ?—பூவுண்டு
வாழுட் வரிவண்டே ! வண்மயிலை நாயகரென்
போழும் துயர்தெரியப் போ.

வண்டு விடுதூது. வண்டே ! என் துயரை நாயகர் தெரியும்படி (நீ தூது) போ என்க.

மாரன் அலர் - மன்மதன் மலர்க்கணை. மாதா அலர் - பெண்கள் தூற்றும் பழிச்சொல். ஏவுண்டு - தைக்கப்பெற்று. ஏறுண்டு - ஏற்று. போழும் துயர் - உள்ளம் உடைக்கும் துன்பம். (ரு)

கலித்துறை.

போகுயர் மேனிலை மாடத் தமளியிற் போயிருந்து
பாகுயர் தேமொழி பாகம் அமர்ந்து ணும் பான்மையரும்
நாகுயர் புன்னை மயிலைப் பிரானடி நண்ணுகிற்பின்
ஆ ! குயர் சேற்றின் அழுந்தினம் சீ ! என்றழுங்குவரே!

நாகு - இளமை; "நாகு முதிர்நுணவம்" (சிறுபாண் 51.) குயர் - பெண்கள். (சா)

விருத்தம்.

அழுங்குவதே நாயடியேன் அல்லலெனும் கடல்வாய்
அலையிடையே துரும்பென்ன அழுந்திமனம் வருந்திப்
புழுங்குவதே நெடும்பிறவிப் பெருநெருக்கிற் புகுந்து
புகலடையா வெற்றுயிர்போல் புந்திதளர் வெய்தி

விழுங்குவதே என்னை அவா வெம்பகுவாய்ச் சுறவம்
வேண்டுவதே திருவடிக்கு விண்ணப்பம்? விளம்பாய்
மழுங்குவதே என்னறிவும் மயங்கினேன் மறந்து
மற்றிதுவோ முற்றறிவெம் மயிலைவளர் மணியே! (எ.)

ஆசிரியப்பா.

மணிநீர் உடுத்த மாயிரு ஞாலம்
அணிசெய் திருப்பதி ஆயிரத் தெட்டும்
மூர்த்தியும் தலமும் தீர்த்தமும் முறையாய்ச்
சீர்த்தி ஞானச் செல்வர் சென்மாச்
செல்ல என்மனம் செல்லா நின்றும்
ஒல்லா தென்றிவ் உடலம் தடுத்தலின்
ஒட்டாது பாவம் உயர்ந்தென உரைக்கும்
பட்டாங் கென்வழி பட்டதாத் தேறிப்
பொன்னும் துகிரும் மின்னும் மணியும்
வேறுபல் பண்டமும் வேண்டிய மட்டும்
வாரிச் செல்லும் வங்கக் கூம்புகள்
நீரிடை மலிந்து நிவந்து வளர்ந்த
காருறை நெடிய கானம் காட்டும்
துறையும் மணல்விரி கரையும் சேர்ந்த
குறையாப் பெருவளம் கொழுவிய மயிலையில்
பொற்பமை தெய்வப் புன்னை நிழற்கீழ்
கற்பகம் படரக் கருணையின் அமர்ந்த
காபா லீச! மூவா முதல்வ!
தேவ தேவ! பாவ நாசக!

கால கால! மூல! முன்னவ!
பால லோசன! பாநு விலோசன!
அண்டர்க் கரியோய்! தொண்டர்க் கெளியோய்!
இறந்திடப் பிறந்திட எண்ணிடத் தொழுதிடச்
சிறந்தது பயக்கும் செழும்பதி எவையும்
இதுவே யாமென வாழ்வேன். அடியவர்
மதுவார் மலரும் மனமும் இமையவர்
முடியின் தொகையும் முழுதும் தீண்டும்
அடிமலர் நீழல் அடியேன்
குடி புகக் கொடுப்பின் குறைபா டிலனென.

கூம்பு - பாய்மரம். கானம்காட்டும் - காடுபோலத்தோற்றும். கற்பகம் - கற்பகவல்லி அம்மை. 'இறந்திட...பதி' காசி, கமலை, அருணை, தில்லை. சிறந்தது - வீடு. 'சிறப்பீனும்' (திருக். 31) 'சிறப்பென்னும் செம்மை' (திருக். 358) 'சிறந்தது பயிற்றல்' (தொல். கற்பு. 51) முதலிய இடங்களினும் இப்பொருள் படுதல்காண்க. என - ஈற்றசை.

ஈச! எளியோய்! என்மனம் செல்லாநின்றும் உடலம் தடுத்தலின், பதி எவையும் (மயிலையாகிய) இதுவே யாமெனத்தேறி வாழ்வேன் (ஆகையின்) அடிமலர்நீழல் அடியேன் குடிபுகக் கொடுப்பின், (யான்) குறைபாடிலன் என்க. (அ)

வெண்பா.

இலன் என்னும் எவ்வம் உடையார்க் கிருமை
நலன் என்றும் செல்லாமை நாடிக்—குலமயிலே!
தென்மயிலை நம்பனடிச் சேராதார் சேர லுறும்
நன்கடற்றை வென்றார் நமர்.

பொருள் வயிற் பிரிவில், தலைமகன் பிரிவு தோழி உணர்த்தல். இலன் என்பதில் அன்விகுதி தனித்தன்மை. 'இலன்.. செல்லாமை' என்பதை 'வறியார் இருமை அறியார்' (செ 333)என்னும் திருக்கோவையாரில் காண்க. செல்லாமை - பொருந்தாமை; 'ஈனல் செல்லா ஏனல்' (புறம்159.) நன்கடறு-கொடியசுரம் வென்றார் - கடந்தார். (௯)

கலித்துறை:

நமரே எனச்சில நல்லாரை நம்பியும் நாம்விரும்பும்
தமரே மயிலைப் பெருமான் அடியர் தருபொருளும்
அமரே வணங்கும் அடியிணையேஎன் அறிவழிந்தும்
கமரே சொரிந்த அமுதென்ன வாழ்நாள் கழிந்திடுமே.

'நம்பியும் அறிவழிந்தும் வாழ்நாள் கழிந்திடும்' என்றும் 'அடியரே நமர்; அடியிணையே பொருள் என்னும் என் அறிவழிந்தும்' என்றும் இயையும். தருதல் - உண்டாக்கல்; ஈட்டல். அமர் - அமரர்; விகாரம். என் - என்னும் எனது; இரட்டுறமொழிதல். (௧௦)

விருத்தம்.

இடும்பையும் இறப்பும் இன்றிவ் இருநிலம் ஆள்வேன் ஆக
கொடும்பிணி உழந்து கைகால் குறைந்திட வாழ்வேன் ஆக
படுங்கடல் மயிலைப் பெம்மான் பதமலர் பணியப் பெற்றேன்
நெடும்புவி இதன்கண் நாயேன் நினைவதும் இனிதான் என்னே?

ஆசிரியப்பா.

என்னே மாதவம் இழைத்தனென்! அச்சோ!
கொன்னே வாழ்க்கை குமைந்தழி யாதே
புல்லே புழுவே பல்வகைப் பிறப்பின்
செல்லா தென்னைச் சிக்கென எடுத்துத்

தேக்கொடு வன்மைத் தெளியாச் சிந்தை
மாக்களின் விடுத்து மக்களின் தொடுத்து
இலக்கிய இலக்கண இருங்கரை புரளும்
நலத்தகு தமிழ்க்கடல் நாயேன் அழுந்தத்
தொல்காப் பியச்சீர்ப் பல்பாய் விரித்து
சண்முக நீகான் எண்பெற அமைத்து
சங்கச் செய்யுளாம் வங்கத் தேற்றி
நாத்திக முதலாம் நீத்தரும் அள்ளல்
துறையிடச் சேரா முறைமையின் தடுத்து
வளியிற் கலங்கி வழியழி கலங்கள்
தெளியும் திருமுறை விளக்கம் கொடுத்து
மெய்கண் டான்துறை மேவச் செலுத்தினன்
பொய்கண் டகன்றார் போயுறும் மயிலைத்
திருப்பதி அதனின் விருப்புடன் அமரும்
சொற்பதம் கடந்த பசுபதி வள்ளல்
கற்பகம் தழுவுமெங் கருணையங் கடலே.

இறைவன் கருணையும் எய்திய பேறும் வியந்ததாகையின் தற்புகழ்ச்சி என்னும் குற்றம் தங்காமை காண்க. (கஉ)

வெண்பா.

கடலே! பிரிந்தாய்கொல் காதலரைத் தாழை
மடலேய் மணம்விரியும் மாமயிலைக் கானல்
திடலேறி நீர்முத்தம் சங்கம் தெறித்தே
உடலே மெலிந் துறங்கேன் ஒத்து?

இரவுக்குறியுள், இரவுறு துயரம் கடலொடு சேர்த்தல். நீர்முத்தம் சங்கம் - பன்மொழி உம்மைத் தொகை. திடல் - மணல்மேடு. (கரு)

கலித்துறை.

ஒத்தேன் அவரை உயர்ந்தேன் இவரை உரைஉணர்வால்
நத்தேன் பிறர்பொருள் நல்லேன் எவரினும் நான்எனவே
பொய்த்தேன் நடித்துப் புலம்புதி வாழி புலைமனமே!
எத்தேன் மயிலைப் பெருமான் துணைத்தாள் இணைவருமே?

எத்தேன் - எந்த இன்பம; தேன் - இலக்கணைச்சொல். துணைத்தாள் - இணைஅடியால் வந்த இன்பம. தாள் - ஆகுபெயர். இணைவரும் - ஒக்கும்; ஒருசொல். நேர்வரும் என்பதுபோல. (கசா)

விருத்தம்.

வருமென்று வழிபட்டு வழிபார்த்த மயிலுருவின் மடந்தைக்கோ வேல்
தருமென்று வழிபட்டுத் தலைப்பார்த்த மயிலூரும் தனையற்கோ பெண்
வருமென்று வழிபட்டுக் குடம்பார்த்த கவுணியர்க்கோ மயிலைக்கோ! எம்
கருவென்று வழிபபட்டுக் குடம்பார்த்த கோலத்தின் கருத்துக் கூறே.

தாம் பெற்ற மயில் வடிவம் நீங்கும்படி பூசித்த உமாதேவியார், வேலாயுதம் பெறும்படி வேண்டிய சிங்காரவேலர், அங்கம் பெண் ஆக்கி யருளும்படி தேவாரம் ஓதிய ஆளுடைய பிள்ளையார், இவர் மூவருள் யாவர் பொருட்டுத் தேவரீர் மேற்குநோக்கி வீற்றிருக்கின் றீர் என்க. குடம் பார்த்த கோலம் - மேற்குநோக்கிய கோலம் (கரு)

அசிரியப்பா.

கூறும் மறையும் திருவா சகமே!
நாறும் மலரும் செந்தா மரையே!
வீறும் சாததிரம் சித்தியார் ஒன்றே!
தேறும் பொருள்கள் பதிமுதல் மூன்றே!

5. ஏறும் இறைவன் எண்குணத் தோனே!
மாறும் உயிர்கள் மயிலே உணர்ந்தே!
ஆறும் பாசம் ஆணவம் ஆமே!

திருவாசகம் - இரட்டுறமொழிதல். மலரிற்சிறந்தது மரைபோலும் மறையிற்சிறந்தது வாசகம்; வாசகமாகிய இலக்கியத்திற்கு இலக்கணமாக உள்ளது சித்தியார்; சித்தியாரிற் கூறப்படும் பொருள் பதி பசு பாசம். இவற்றுள், பதியாவான் எண்குணத்தான்; பசுவானது சார்ந்ததன் வண்ணமாய் உயருந்தன்மையது; பாசம் என்பது பதி அருளால் பசுவைவிட்டு நீங்குந் தன்மையது என்க. (கசு)

வெண்பா.

'ஆமே நமக்குமிவர் ஆழ்ந்த கருத்தறியப்
பூமேவு செங்கரத்துப் பூந்தழையே—'காமேவு
மாமயிலைக் கோமான் கைம் மானுங்கைம் மானுமிங்குப்
போயினவோ' என்பர்புனம் போந்து.

இருவரும் உள்வழி அவன் வரவுணர்தலில், தலைமகன் அறிவு தோழி நாடல். பர்பு என்னும் தய்யச்சந்தம் மெலிந்து தனச்சந்தமாயது. "சங்கறுப்ப தெங்கள்குலம்" என்பதிற்போல. கைம்மான் - கையின்கண் உள்ளமான்; கையையுடைய மான், யானை. (கஎ)

கலித்துறை.

போந்திடச் சிற்றுயிர் இம்மையின் மாடு புரிந்தருளிப்
போந்திட மற்றுயிர்ப் போதங் கழுவிப் புணர்ந்ததுவாப்
போந்திட் முற்றுயர் போதம் உதவிப் பொலங்கழலாம்
போந்திடா வீடும் புணர்ப்போன் மயிலையெம் புண்ணியனே.

### விருத்தம்.

புண்ணியம் தினையும் இல்லேன்
பொய்யுடல் முழுதும் புண்ணேன்
திண்ணிய இரும்பின் நெஞ்சேன்
தீயவை விரும்பித் திண்ணேன்
எண்ணிமுன் கோயில் சூழேன்
இருந்துநின் பெயரும் எண்ணேன்
கண்ணுதல் மயிலை வாழ்வே !
கடியனேன் வாழக் கண்ணே.

கடியனேன் வாழக் கண்-கொடியனாகிய யான் உய்யுமாறு திருவருள் சுரக்கவேண்டும். கண்ணல்-கருதல். தின்றேன்-திண்ணேன் என மரீஇயது; 'ஒண்ணேன்' போல. (கசு)

### ஆசிரியப்பா

கண்வழிக் கையும் கருத்துடன் காட்டிப்
பண்வழிப் புருவமும் பயின்றிடக் கோட்டித்
தோரிய மகளிர் சூழ்ந்திடக் கூட்டி
ஆரியம் நடிக்கும் அரம்பையர் அரங்கும்
தூரியம் முழங்கித் தூசணி துலங்கும்
எண்ணில் மாடமும் எழில்வர விளங்கும்
மண்ணகம் புகழும் மயிலையம் பதியிடை
திண்ணிய கருஞ்சினைத் திகழ்பைம் பாசடைப்
புன்னையின் நீழல் பொதுவற உலகுடை
அன்னையோ டமர்ந்த அரவணிப் பெரும !
சிவமெழுந் ததுவும் செம்மையின் நின்றால்
சிவமழுந் துவரால் செம்மையின் நின்றார்.

அதா அன்று,

செம்மையே வாய்ப்பர் சிவத்தைப் பேணினர்
செம்பொருள் என்பதே சிவத்தைச் சுட்டலால்.
சீரிய பொருளினைச் செவ்வே அறியார்
ஆரிய பதமென அல்லாந் தறைவார்.
உருவமும் பெயரும் ஒன்றும் இலாய்நீ
அருவருப் பவரிடை அடையாய் எனினும்
மெய்ப்பொருள் நின்னை மேவியும் அவர்தம்
பொய்ப்பொருள் நீக்கப் போகார். அந்தோ!
பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளான் ஆக்குவர் மாணாப் பிறப்பவர்
தெருளும் வண்ணம் தெருட்டி
அருளும் முறைமை அமையும் நினக்கே.

தோரிய மகளிர் - கூத்தின் முதிர்ந்த பெண்கள். ஆரியம் - ஒரு வகைக் கூத்து. பிறப்பை அவர் மருளான் ஆக்குவர்; அவரைத் தெருட்டி அருளும் முறைமை நினக்கு அமையும் என்க. (உ1)

வெண்பா.

கேளாகத் தென்மயிலைக் கோமான் கழல்நினையார்
ஆளாகும் அவ்வினையின் வெவ்வர் அழற்கானம்
மீளா இனிவந்தோம் மெல்லியலாய்! அவ்விறைவன்
தாளேயும் தண்நகரம் தான்

உடன்போக்கின்கண், பதிபரிசு உரைத்தல் வெவ்வர் என்பதும் வெம்மை என்னும் பண்பிற்கு ஒரு வாய்பாடு; 'வெவ்வரோச்

சம்பெருக'-(பதிற். 41-) அவ்வினை-சுட்டு, வினையின் கொடுமை மிகுதி காட்டிற்று. (உச)

கலித்துறை.

தானே எனக்குத் தனுகரண போகமுன் தந்தபின்னர்
யானே எனத்தான் ஒளித்துடன் வல்வினை ஏற்றதன்றிக்
கோனே எனப்பரி பாகத்து வந்துபூங் குரைகழற்கீழ்த்
தேனே எனஒன் றளிப்பான் மயிலை எம் தேசிகனே.

'தேனே எனஒன்று' என்றது பேரின்பத்தின் பெற்றிபேச அருமையான். (உஉ)

விருத்தம்.

நேயம் நின்கணே தோய வைத்திலேன்;
நெஞ்சம் வஞ்சியர் தஞ்சம் மிக்குளேன்;
தீய நாவினேன்; தூய நல்லவர்த்
தீங்கு செய்துளேன்; ஆங்கு மெய்யெலாம்
நோய தாயினேன்; தாய நின்னலால்
நொய்ய யாரையும் 'தூய.' என்றிலேன்;
பாய வேலைசூழ் மயிலை எம்பிரான்
பாவி யேனையும் கூவிக் கொள்வையோ?

தாய - தாய்போன்ற. பாய - பரவிய. (உங)

ஆசிரியப்பா.

வைகார்ப் பொழுந்த விபூவணி சிறந்த
செய்யாள் செய்த திருநகர்ப் பெரும!
நின்னையும் நின்செயல் தன்னையும் நினைந்து
பின்செல நாயேன் பேதுறு கின்றனென்.

முன்னாள், நஞ்சம் குடித்துநின் நெஞ்சம் கறுத்தபின்
கஞ்சன் கருதிக் கைபுனைந் தியற்றாக்
கல்விற் பிறந்த மெல்லியல் தன்னைப்
பல்விழித் தோகைப் பறவையா கென்னவும்
அன்னாள், தடவரை நின்றுமுன் தென்புலம் சென்றுபின்
வடவிரை நிகரும் இடமது கோலிவன்
இரும்பு திரித்த இருந்தாள் புன்னைப்
பரம்பு நிழற்கீழ் புராவ மகிழ்ந்துமன்
“தையால்! மயிலஞ் சாயல் மாதரும் இவ்விடம்
மயிலைமா நகருமா மாறுக” என்னப்
பித்தன் குணமிலி மத்தனென் றழைக்கும்
அத்தகு பெயர்கள் அடுத்தன நினக்கே!
சிரமே, ஆறு பாயநீள் அறுகு விளையுமே!
நுதலே, நீறு பூவா நெருப்புத் தூவுமே!
கரமே, சில்பலி வாங்கச் சிரத்தைத் தாங்குமே!
சுவலே, கொல்கரி கொடுத்த நல்லுரி உடுக்குமே!
சடையே, விழியின் ஒளியை அழிய மின்னுமே!
இடையே, புலியிற் பெற்றதை மலியத் தற்றுமே!
கழலே, இருவரும் ஒருவரும் அறியா;
சொல்லும் செல்லா நல்லிடத் தேயென.

வைகு ஆர்ப்பு - ஒருகாலும் இடையறாது தங்கின ஆரவாரம். செய்யாள்-இலக்குமி. பின்செல-அடிமைப்பட. கல்-இமயமலை. தடவரை, வடவரை - கயிலைமலை. வடவரை-சுட்டுப்பெயர்கண் வந்த

பொருட்பெயர். தற்றும்-உடுக்கும். சுவல்-புயம். இருவர்-விண்டுபிரமர். ஒருவரும்-யாவரும். புகழாப புகழ்ச்சி அணி. (உச)

வெண்பா.

இடன்சிறந்த தென்மயிலை எண்ணுதார் நண்ணும்
இடன்வறந்த கான்அன்பர் எண்ணினர்கொல் மன்னர்
இடன்கூட்டும் ஒன்றோ இடன்கூட்டும் கல்வி
இடன்காணின் என்றார் எனக்கு.

ஓதற்பிரிவில், பிரிவு நினைவு உரைத்தல். கான் அன்பர் எண்ணினர்கொல் - கல்வியின் பொருட்டு நம்மைப் பிரிந்து கானம் கடந்து செல்ல நமது காதலர் நினைத்தார் போலும். மன்னர் இடன் கூட்டும்-அரசர் அவையினும் சேர்விக்கும். ஒன்றோ - அம்மட்டோ. இடன் கூட்டும்-செல்வத்தைச் சேர்க்கும்; 'இடனில் பருவம்' (திருக்-218.) நல்ல இடன் காணின்-(கல்வியானது தன்னைத்) தக்க இடம் அறிந்து சொல்லப்படின்; கல்வி இடம்-கல்விப் பரப்பு எனவுமாம். (உரு)

கலித்துறை.

எனக்கே வருநாள் பிறப்புள தாயின் எழின்மயிலை
தனக்கே வருவது தம்மான் பணியில் தலைசிறந்து
மனக்கே வருதுயர் மாற்றிய தொண்டர் மலிந்தியங்கும்
இனக்கேழ் வருபடி ஒன்றெனத் தென்கபா லீச்சரத்தே.

வருவது-பிறக்கவேண்டும் ; வியங்கோள். மனக்கு-மனத்துக்கு. கேழ்வரு-நிறம் பொருந்திய. கபாலீச்சரம்-திருமயிலைத் திருக்கோயில். ஆராயின், எனக்குப் பிறப்புஉண்டு; அதில், மயிலைக் கபாலீச்சரத்தின்கண் தொண்டர் இயங்கும் ஒருபடியாக யான் பிறக்கவேண்டும் என்க. (உ௬)

விருத்தம்.

சரத்தான் புரத்தை எரித்தோய்! கேள்
சரியும் நிறையும் சரிப்போனாய்
வரத்தால் உயர்ந்த தவத்தோர் வாழ்
வனத்தில் பலிபோய்த் திரிந்தாயோர்
கரத்தால் சிரத்தைத் தரித்திடைமேல்
கவந்தி உடுத்தார் என்பாரால்;
மரத்தால் உயர்ந்த புன்னையங்கான்
மயிலை நகர்போல் அவ்வனமே?

இச்செய்யுள் இறைவன் கபாலம் ஏந்திய கோலத்தை உட்கொண்டது. சாத்தான் புரம்-மன்மதன் உடல். சரி-வளை. வனம்-தாருகவனம். பலிபோய் பிச்சைக்குச்சென்று. சிரம்-பிரமகபாலம். கவந்தி-கோவணம்; 'ஓடும் கவந்தியுமே உறவு' என்பது எம் குருவாசகமாகிய திருவாசகம். இக்காலத்து இச்சொல் கந்தை என வழங்கும். போல்-போலும்; ஒப்பில் போலி. தாருக வனத்தில் காட்டிய கோலத்தோடு இம் மயிலையின் கண்ணும் நீ வீற்றிருக்கின்றமையால், அத்தாருக வனந்தானோ (இம்மயிலை) இபபுன்னை வனம்? என்க. (உஎ)

ஆசிரியப்பா.

வனப்பென உயிர்க்கு நல்லோர் வகுத்த
பனத்தகு நிலைகள் நான்கிடை இந்நாள்
வழங்குவ இரண்டே வரன்முறை வழுவி!
சழக்கே ஒழுக்கம்! வழக்கே என்னில்
5. உலகம் ஒன்றே உயர்ந்தது போலும்!
நலமலி நூலும் நலிந்தது மற்றே!

அன்றியும் இறைவ! அருளிய உயிர்நூல்
நன்றியால் நினக்கே நல்கினம்; தீண்டேம்.
ஓரோவழி ஒன்றை ஓதினும் அந்தோ!
பராவல் செய்யேம்; பழிப்பேம் ஆயினேம்.
மற்றது போக; யாம் சிற்றறி வுடையேம்
கற்பன வாயுள பற்பல நூலுளும்
இலக்கணம் எமக்கோ எட்டியே ஆயது
புலக்கண் அன்னது புகுவ தன்மையின்.
எழுத்தும் சொல்லும் யாப்பும் பருகிப்
பழுத்தேம் புலமை என்பேம்; பொருளின்
அகத்தும் புறத்தும் அவ்வள வறியேம்.
மிகுத்த முப்பொருள் மெய்யே அறிவேம்!
இவைபல நால வகையே ஆகையின்
நவையறு நின்னியல் நாயேம் படிக்கவும்
புண்ணியம் இல்லேம்! பொய்கையும் புலவரும்
நண்ணிய மதுரைச் சங்கம் உவப்பக்
களவியல் கண்டு கற்பகக் கொடியொடு
வளவிய தெங்கம் சோலை உடுத்த
மயிலையில் அமர்ந்த புலவ! மற்றெம்
பயில்வுறு பாசம் படர நோக்கி
ஊனக் கண்ணும் தருவ சுமதி
ஞான வில்லியை நாயேன் தமக்கெனா.

நிலைகள் நான்கில் வழங்குவ இரண்டாவன - கிரகத்தமும் சந்நியாசமும். முறைவழுவாவது-இளமையில் சந்நியாசமும் முதுமையில் கிரகத்தமும் கொள்வது. 'உயிர்நூல்-தீண்டேம்' புகழ்ச்சியில் பழிப்பு. பற்பலநூல்-உலகநூல். எட்டி-வெறுப்பு; இலக்கணை. 'புலக்கண்-அன்மையின்'-அதைப் புலங்கொள ஆற்றல் இல்லோம் என்பதே கருத்து.

பஞ்சஇலக்கணத்துள் அகப்பொருள் புறப்பொருள் இலக்கணமே அறியாத யாங்களோ முப்பொருள் இலக்கணம் அறியவல்லேம்? அறியேம் என்பதாம். முப்பொருள் - பதிபசுபாச இலக்கணம்; ஆகுபெயர். அறிவேம் - பிறகுறிப்பு. பொய்கை-பொற்றாமரைக் குளம். கண்டு- அமர்ந்த, ஒடு அமர்ந்த என்க. படரவும் ஒருவவும் நோக்கி, நாயேமுக்கு ஞான வல்லியை ஈமதி என்க. மதி-முன்னிலையசை. என-ஈற்றசை. (உஅ)

### வெண்பா.

தமக்கெனநாம் வாழ்தல் தெரியாரோ பண்டே
நமக்களித்த சொன்மறவார் நண்பர்—அமர்த்திரைசூழ்
மாமயிலை அன்னாய்! மறந்தவர்வாய் பொய்ப்பின்மெய்
போமிடம்நீ வேறென் புகல்.

வரைபொருட்பிரிவில், வாய்மைகூறி வருத்தம் தணித்தல். வாய்-உண்மை; ஆகுபெயர். மறந்து அவர் வாய் பொய்பபின்-தாம்சொன்ன சூளுறவை மறந்து அவர் உண்மை தவறுவாராயின். (உகூ)

### கலித்துறை.

புகல்கின்ற நால்வகைச் சொல்லிரண்டேயாய்ப புகுந்தொடுங்கிப்
பகர்கின்ற காரணப் பேரொன்றுமேயாம் பரிசுணர்ந்தோர்
இகல்கின்ற முந்நீர் மயிலைஎம் பெம்மான் இணைமலர்த்தாள்
அகல்கின்ற பல்பொருள் ஆமாறுணர்ந்தோர் அகலிடத்தே.

"சொல்லெனப் படுப பெயரே வினை என்று, ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே"; "இடைச்சொற்கிளவியும் உரிச்சொற்கிளவியும், அவற்றுவழி மருங்கின்தோன்றும் என்ப"—(சொல், பெயர், 3, 4சூ.) என்பது தொல்காப்பியம். இடைச்சொல் பெயர்ச்சொல்லினும், வினைச்சொல் பண்பாகையின் உரிச்சொல்லினும் அடங்கும். அடங்கவே, கடைசியாய் உள்ளசொற்கள் பெயரும் உரியுமாம். இவைஇரண்டும், பொருளின் குணமே ஆகலின், ஒன்றேயாம். ஒன்றே ஆகவும், பெயரே முதல் என்பது யாது காரணம்பற்றி எனின், குணப்பண்பும் வினைப்பண்பும் ஒருபொருளிடத்தே காணுமுன்னே பெயர்ப்பண்பு

காண்கின்றோம் ஆகையின் என்க. இனி, பெயர் எல்லாம் காரணத்தை உடையன. என்னை? பொருளின்பண்பே பெயர் ஆகலானும், பொருளும் குணமின்றி இல்லாமையானும், ஒருபொருளைக் கண்டேயாயினும் கருதியேயாயினும் பெயர் இடவேண்டுதலானும் பெயர் எல்லாம் காரணத்தை உடையன ஆகும். ஆயின், இடுகுறிப்பெயர் இல்லையோ எனின், காலமென்னும் காரிருளில் காரணம் கரந்தபெயரே இடுகுறியாம் என்க. தாள்-சிவசத்தி; "இறைவனார் கமலபாதம்"-(சிவஞானசித்தி. பாயி.)பரிசு உணர்ந்தோரே, தாள் பல் பொருளாகப் பல்குமாற்றை உணர்ந்தோராவர் என்க. (௫०)

விருத்தம்.

இடத்தே படரும் பசுங்கொடியும்
இமையோர் முனிவோர் எல்லோரும்
குடத்தே முகந்து புகுந்துண்ணக்
கோயில் கொண்ட திருக்குறிப்பும்
தடத்தே திரைகள் விழுந்தெழுந்து
தவழும் மயிலைப் பெருமானே!
மடத்தே முதிர்ந்த நாயடியேன்
மறவேன் என்றும் மறவேனே!

கொடி-கற்பகவல்லி அம்மை. குடத்தே புகுந்து - மேற்குவாயிலில் வந்து. (௫௧)

ஆசிரியப்பா.

மறவேன் மூன்று மலமும் களையேன்
களைந்த ஞானியர் கலப்பும் இல்லேன்
இலிங்கமும் சங்கமும் இறையெனத் தேறேன்
தேறி அவருருத் தெளிந்து வழிபடேன்
வழிபட அன்பர் மயிலையில் அமர்ந்தோய்!
கழிபெருநகையேன் கலந்திடக் கழற்கே.

இஃது சிவஞான போதத்துப் பன்னிரண்டாம் சூத்திரத்தின் விரி. மறவேன்-பாவி. (௯௨)

வெண்பா.

கழன்ற வினையார் கருதுகின்ற புன்னை
நிழன்ற மயிலை நிருபர்—குழன்றகுழல்
மாதே! தமர்வேண்டும் மாநிதியம் சங்கொடுமிப்
போதே விடுத்தனர்காண் போம்.

வரைபொருட் பிரிவில், நிதிவரவு கூறுநிற்றல். கழன்ற வினையார்-'கழிந்த உண்டியர்'-(திருமுருகு 131) என்பதுபோல நின்றது. சங்கொடு-சங்கமுழக்கத்துடன். (௯௩)

கலித்துறை.

காணேன் நினது கழலடிக் காமன்பு கண்டபின்னும்
பூணேன் பொடிமணி பூசிப் புனையேன் பொருந்திமனம்
பேணேன் திருவஞ் செழுத்தும் புகன்றிடப் பேயனந்தோ!
நாணேன் மயிலையில் நாயகனே! உனை நண்ணுதற்கே. (௯௪)

விருத்தம்.

நண்ணும் மயிலைப் பெருமான் எழிலார்
நளினப் பதங்கள் நமக்குமென்னுக்
கண்ணும் கருத்தும் கருமம் எனைத்தும்
கணைநேர் விழியார் கடையிருத்தி
உண்ணும் சுவையின் உடையின் மயங்கி
உடையாய்! கடையேன் உனைமறந்தேன்
எண்ணும் பொருளே! அளியார் துணையே!
எளியேன் உயர்வீ எடுத்தருளே! (௯௫)

### ஆசிரியப்பா.

எடுத்தா ளாயேல் எந்தாய் ! எம்மைப்
படுத்தவன் பொய்யின் படலம் கீறி
விடுத்துக் கூழின் மலிவும் மயக்கும்
அடுத்தரு ளாவிடின் அழியா உரிமை
உடுத்த சிறியேம்,
தடுத்திடை அயரா அன்பின் ஆர்வலர்
கடுத்த உரவோர் கருத்தினும் உரையினும்
கெடுத்தேம் என்றழி கேடில் சோரன்
நடுத்தறி நாதன் நின்னை
மடுத்தொரு கருவி தீண்டலும் ஆமோ ?
அதனால்,
முன்னைநின் துணைமலர் முதிர்சுவை வான்பிழி
என்னையும் ஊட்டினை யானது மறவேன்
இன்னமும் பெறுவான் எம்பலித் தம்மா !
மன்னுயிர் ஒன்றாய் வேறாய் உடனாய்த்
துன்னிய இறைவ ! நின் திருவுளம் அறிமே !
புன்னையங் கானல் புறமெலாம் கவினிய
நன்னர் வளமலி நகர்மா மயிலையில்
அன்னை ஆளுடையாள் அமர்தர இடத்தே
பின்னிய சடையும் பிச்சைஊண் ஓடும்
கன்னங் கரிய கண்டமும் களிற்றுரி
பின்னணி பியமும் பேழ்வாய்க் கொடுவரி
வன்னத் தோலுடை வயங்கிய மருங்கும்
பன்னகக் கச்சும் பஃறலை மாலையும்
பின்னரும் பிறப்பினைப் பேணுறும் பேதையா
தன்னமும் நினைவரும் தமியேம் புணையாம்

பொன்னடித் துணையும் படமா
என்னகத் தெழுதிய எழுதரும் கோலம்
என்றொரு பொழுதும் ஏழையேன் அயர்ந்து
கொன்னே அழியும் அவ்விடை அளித்தல்
நின்னது கடனெனப் பன்னலும் மிகையே ?

வன் பொய்-வலிய ஆணவம். நினைவரும் பொன் அடி; புணையாம் பொன் அடி என இயையும். என்றொருபொழுது-யாதானும் ஒருகாலத்தில். எந்தாய்! நீ அருளாவிடின், சிறியேம், கீறி, விடுத்து, கருவியால் தீண்டலும் ஆமோ? அதனால், கோலத்தை ஏழையேன் அயர்ந்து அழியும் அப்பொழுது அளித்தல் நினது கடனென்று யான்வேண்டுவதும் மிகை அன்று என்க. (௯௬)

வெண்பா.

மிகைசெய்ய யாம்ஒட்டோம்; மென்னகையார் காணின்
பகைசெய்வார்; தர்மேல்எம் பாதம்;—தொகைசெய்த
ஆரூரன் யாம்அல்லோம்; அன்றி இதுமயிலை;
தேரூர்ந்து நம்மவர்பால் செல்.

பரத்தையிற் பிரிவில், பள்ளியிடத்து ஊடல். தொகை-திருத்தொண்டத்தொகை. ஆரூரன் யாம் அல்லோம்-என்றது ஆரூரனாயின் பெரியாரைச் சிறுதொழில் செய்ய ஏவுவன்; யாம் அவ்வாறு செய்யோம் என்றவாறு. அன்றி இதுமயிலை-என்றது அல்லாமலும், ஆரூராயின், யாம் மிகை செய்யக் கூடும்; இதுமயிலை ஆகையின் அது செய்யக்கூடாது என்றவாறு. (௯௭)

கலித்துறை.

செல்வம் கொழிக்கும் குலமும் தழைக்கும் செழுங்கிளையால்
இல்லம் பெருக்கும் இணையொன் றிலாவான் இயைத்திடுமால்
மெல்லம் புலம்பின் மயிலைப் பிரானடி மேலொருவன்;
கல்லம்பி யாகக் கரைசேர்ந்த மாட்சிக் கருமொழியே. . . .

வான்-சிவபுரம். மேல் - முன்னாள். ஒருவன் - திருநாவுக்கரையர் கருமொழி - பெருஞ்சொல்; அது ஐந்தெழுத்து. (௩௮)

விருத்தம்.

மொழிய தாக சிந்தை செய்கை மாதர் மாட்டு மூர்க்கனேன்
கழிய போகம் நல்கு நின்கண் வைத்தி லாத காமியாய்ச்
செழிய தீயிற் புக்கு மாயும் விட்டில் போலச் சிக்கினேன்
தழிய காயல் மயிலை யாள! தாளில் ஏற்றுத் தாங்கிடே. (௩௯)

ஆசிரியப்பா.

எளக் கெருத்தும் எருத்து நோக்கும்
தூக்கிய கேள்விமன் தொளையாச் செவியும்
இரும்பினும் வன்மைகூர் இருந்தை நெஞ்சும்
திருந்திய திருவுடைப் பெருந்திறல் செல்வர்
கடைதொறும் நடந்தும் இடைபெற முயன்றும்
ஏட்டினைப் பாட்டினை எடுத்து விரிப்பான்
உள்ளந் தாளுடன் உள்ளமும் தேய்ந்தும்
எய்த்தும் கைத்தும் ஏங்கியும் சாய்வுறும்
முத்தமிழ் உணர்ந்த வித்தகப் புலவீர்!
கற்பவை கற்றும் புற்புத மாந்தரை
வெற்றவர் வெஃகும் நிற்றலில் பொருட்காச்
சார்தல் நுமக்கும் சால்போ? சார்போ?
ஆலம் அருந்திமுன் அமரர் ஆக்கியும்
பாலகன் பசிக்குப் பாற்கடல் ஊட்டியும்
மாணிக் குயிர்தர மறலி உதைத்தும்
வேணியிற் கொன்றை நதியுடன் வேய்ந்தும்
ஆழியும் விழியும் ஆழியோற் களித்தும்
சலையறத் தேம்பி நிலையுறச் சாம்பி
ஒளிகெட மாழ்கி நளிர்படும் மதியோன்

பலகலை வாய்ந்து உலகிடை நிலவ
இன்னருள் சுரந்து மன்னுயிர் யாவும்
வினையின் இடைந்து வெதும்பும் இடத்தெம்
புனைகழல் உதவிப் புரப்பேம் யாமெனக்
கரியது காட்டிய விரிசடைக் கடவுள்
தேவரோ மூவரோ யாவர் தமக்கும்
இசைதல் செல்லாப் பசுபதி நாமம்
வீறுறப் படைத்த ஏறுடை இறைவன்
செந்தமிழ்ப் போற்றும் அந்தணர் ஓத்தும்
அலைகடல் ஆர்ப்பும் அடியவர் ஏத்தும்
வற்றா வளனும் முற்றிய மயிலையில்
முத்தம் அரும்பி மரகதம் காய்க்கும்
பைத்த புன்னையின் பாங்கர் நாயேம்
காட்சிக் கெளிவந்து கற்பகக் கொடியோடு
ஆட்சிசெய் அண்ணல் அடிமலர் அண்மின்
மறுமையிற் சோறும் பெறுவீர். இம்மையின்
வசையில் குலனும் வளனும் நலனும்
இசையும் கொடுத்திட இயலார்
பெருத்த வனப்பின் திருத் தங்கும்மே!

புலவர் ஆற்றுப்படை. ஏக்கெருத்து - எடுத்தகழுத்து. இருந்தைநெஞ்சு - இருண்டமனம். புற்புதமாந்தர் நிலையாமனிதர். புலவீர்! மாந்தரைச்சார்தல் சால்போ? சார்போ? அண்ணல் அடிமலர் அண்மின், மறுமையில் சோறும் பெறுவீர்; இம்மையில் திருமகளும் தங்குவள் என்க.

சோறு முத்தியின்பம்; "பாதகமே சோறுபற்றினவா"—திருவா. தோணே. 7 செ. (௪0)

திருமயிலை நான்மணிமாலை

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

கச்சிஆனந்தருத்திரேசர்

# வண்டுவிடுதூது.

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்து

## ஸ்ரீ கச்சியப்பசுவாமிகள்

அருளிச்செய்தது.

இது,

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை

ம-ள-ள-ஸ்ரீ

தி. குமாரசாமிசெட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி,

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்து,

சென்னை:

திராவிட ரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வசித்துஹு பங்குனிமீ.

இதன்விலை அணா உ.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

---

திருவாவடுதுறையாதீனத்து
வித்வான்

## ஸ்ரீ ஆறுமுகசுவாமிகள்

இயற்றியது.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருத்துறைசை யமர்நமச்சி வாயதே சிகன்மலர்த்தாள் செறிக்கு
முள்ளப் - பொருத்துறைசை வசித்தாந்தக் கடலொடுசெந் தமிழ்க்கட
லும் பொதியத் தோன்றல் - விருத்துறைசெ யிதுவெனமீட் டுமிழாம
லுளத்தடக்கு மேன்மை பூண்டோன் - கருத்துறைசெய் புகழ்க்கச்சி
யப்பமுனி வரர்பெருமான் கருத்தி னோர்ந்து. (க)

உருக்கச்சின் மழலைமொழி செங்கனிவாய்ச் சியர்மயலி னொருப்
பட் டென்று - முருக்கச்சி னுழலாமன் மோகமறுத் துணர்ந்தின்ப
மூழ்கும் வண்ண - மிருக்கச்சி வாயநம வேணுமுறி யெனவெனையு
மேன்று கொண்ட - திருக்கச்சி யானந்த ருத்திரேச் சுரர்கமலச் செழு
ம்பூந் தாளில். (உ)

பண்டுதிரு நாவலூர் வன்றொண்டர் கழல்பரவப் பரவை யார்பா-
லண்டுபடு தூதெனச்சென் றவர்பிரியர் தூதிலெனு மமைவு கொண்டு-
கண்டுபடு மின்சுவையு மிதன்சுவையைக் கண்டுபடு கலப்பின் மேவத்-
தொண்டுபடு மெனும்வண்டு விடுதூதென் றோரலங்கல் சூட்டி னனால்.()

அன்னதன்றன் சொல்லழகும் பொருளழகு மற்றுமுள வழகு நோக்கி - யின்னதனை யுலகினுக்கோ ருபகார மாகவச்சி னியைத்து நல்கென்-றென்னவளங் களும்பொலியு மீழவள நாட்டிலெழி லிணையி லாது - மன்னுகொழும் புத்துறையென் றியம்புவள நகர்விளங்க வந்த வள்ளல். (௪)

ஈகையினா லைந்தருவை யெழிலதனான் மன்மதனை யிணையில் செல்வத்-தோகையினாற் றனதனைமெய் யுணாயினரிச் சந்திரனை யுணா சால் கல்வி - வாகையினா லகத்தியனை மானுவான் றன்புகழ் வாழ்த்தா வாயை - மூகையினாற் பொலியவைத்தோன் குமாரசா மிக்குரி சில் மொழியக் கேட்டு. (௫)

மற்றதனை நலமுறவாய்ந் தச்சிடுவித் தானவனியார் வழங்கு கென்னிற் - கொற்றவர்கள் புகழ்தருமந் தணர்குலத்தோன் சாத்து விக குணத்தான் மேம்பா - டுற்றவனற் றமிழ்க்கலைகள் வரம்புகண் டோ னல்லொழுக்க மொருங்கு வாய்ந்தோன் - கற்றவர்கள் புகழ்தரு மப் புகழொன்றே கைக்கொள்ளக் கற்ற நல்லோன். (௬)

மன்னுறுமுத் தமதான புரத்துதித்தோன் றனைத்துருவி மருவி னோர்க்குத் - துன்னுறுமுத் தமதான மெனக்கல்வித் தானமென்றுந் துலங்கச் செய்வோன் - பன்னுறுசீ வகசிந்தா மணியுரையச் சிட்டுல கிற் பரவச் செய்தோன் - பொன்னுநிக ராப்புலமைச் சாமிநா தப்பெ யர்கொள் புநிதன் மன்னே. (௭)

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# கச்சி ஆனந்த ருத்திரேசர்

# வண்டுவிடு தூது.

## காப்பு.

மணிநீரப் புவிவியக்கும் வண்காஞ்சி வைப்பிற்
பிணிநீர் மலம்பெயாக்கும் பெம்மா - னணிசீர்செய்
வண்டுவிடு தூதுக்கு வான்பொருளை லாநிரம்பக்
கண்டுவிடு முக்கட் களிறு.

திருவழங்கும் பல்கலையுஞ் சேர்கருமிடர் நீக்கு
மருள்வழங்கு மானந்த மாகரு - மருவழங்கு
மாத்தி மதிமிலைந்த வானந்த ருத்திரனைத்
தோத்திரஞ்செய் வார்க்குத் துணைந்து.

## நூல்.

க. பூமாது புல்கும் புயல்வண்ணப் புத்தேளு
நாமாது புல்குநளி னத்தோனுங் - கோமானும்

உ. வானவரு மண்ணவரும் வானடைய வைந்தொழிலுந்
தானடவி நின்ற தனிமுதல்வன் - வானமுதற்

# கச்சிஆனந்தருத்திரேசர்

தற் காரணமாய்ப் பூத பவுதிகமாய்ப்
ரமு மான பெருஞ்சோதி - கோதகன்ற
ற்றறிவுக் குள்ளே செறிந்து திருமேனி
முற்று மெடுத்த முறைமையான் - முற்ற
மறையாக மங்கலைகண் மற்றுங் கிளந்து
முறையாவும் வைத்த முனைவன் - முறைபுரியு
ரு. மாருயிர்க்குப் போக மருத்தித் திரம்புயிர்கட்
கோருமருந் தன்ப முறுத்துவோன் - சாருடலி
எ. னைந்தவத்தைச் சாக்கிரத்தி ஞர்வினையிட் டாவிசட்கு
மைந்துமல மிந்துவென வாட்டுவோன் - முந்து
அ. மலமாற வண்கருணை மாரு வருளி
னிலைமாறு பாக நிறுப்போன் - மலமூன்றும்
கூ. போக்கி முழுத்த புகருயின்ா யாங்கறிவி
ஞக்கித் தனைக்காட்டு மாண்மையா - ஞாக்கியெழு
கo. மெற்றந் தவிர்த்தொளியி னேய்த்துத்தன் ஞேடொருக்கி
யற்ற நிலையரு ளானந்த - ஞெற்றைமறை
கக. மாவு மிருசுடரும் வான்விலங்கு மொண்கோட்டத்
தேவியமை தீர்த்தங்க ளோரிரண்டு - மேவினர்க்குப்
கஉ. பல்பவத்துத் தாதையரைத் தாயரைப்பூல் கேளிரையிவ்
வொல்பவத்துக் காட்டுமிட மோர்மூன்றும் - வெல்பனுவல்
கரு. வாக்கியிழி மூகையென மூகைமொழி வாக்கியென
வாக்குவது நீரமுது மார்த்துவதுந் - தேக்ெகறிய
கச. வேட்டன யாவும் விளைப்பதுவு மென்னவிரு
ளோட்டுமெணித் தெற்றி யொருமூன்று - மீட்டுழவொன்
கரு. றின்றி விளைப்பதுவித் திட்டஞான் றேவிளைவு
துன்றுவது கொய்யுந் தொறுமீள - நன்று

# வண்டுவிடுதூது.

௧௬. விளைவதென மும்மை வியனுலகும் போற்றும்
வளமலிந்த தெய்வவயன் மூன்று - மொளிருமென்றாழ்

௧௭. வேத னரியரனை விண்ணோர் தொழத்தெரிக்கு
மாதி மடங்க லணைநான்கு - மாதரமிழ்

௧௮. தூற்றுபொலம் பூஞ்சூத மொண்ணிழல்சா யாக்காஞ்சி
தோற்றுதயில் பூவல் சுவைப்புளியல் - வேற்றலரும்

௧௯. பூக்கு மிருப்பைமலர் பொன்னத்தி யென்றுவிண்ணைத்
தாக்குங் கடவுட் டருவைந்துங் - தேக்கமல

௨௦. மெல்லிற் பகற்குமுத மேய்ந்தலர்வ தோர்நாளத்
தல்லிக் கமலத் தலர்மூன்று - புல்லுவது

௨௧ வானர மாக்குவது வண்மை தருவதொன்றோர்க்
கூனமுய்ப்ப தாந்தடங்க ளோரைந்தும் - வானமழை

௨௨. காலமன்றிப் பெய்யக் களைமஞ்ஞை வேட்டவெலாஞ்
சாலவரு ணேமிமறை சாற்றுகிளி - நாலிசைவல்

௨௩. பூவை முழுதுணர்க போதங் கணித்தாந்தை
பாவு புகழ்ப்பறவை யோராறுங் - தேவர்மொழி

௨௪. கேட்ப வுரிகாமொழி கேட்பவிண்ணோர் காணவிழு
தேற்பதின்றித் தீப மெரியமுயற் - காப்பொடிய

௨௫. மங்கத் திசைமயக்க மல்கவொலித் துந்துமிகள்
பொங்கத் திகழ்ந்த பொதுவேழுங் - தங்குபிணி

௨௬. சீப்ப மனக்கினிய சேர்ப்ப விழைந்தவெலாம்
யாப்பமணி யேரிசைப்ப வேமவுருக - கோப்பப்

௨௭. புரவலன்வாழ் வுய்க்கமெய்ஞ்ஞா னம்புணர்த்த வீடு
தரவமைந்த தண்பொய்கை யெட்டும் - வரவிமையோ

௨௮. ராக்கவிடந் தீர்க்கசித்தி யார்த்தவுயிர் நல்கவழக்
கூக்கி யறுக்க வுறுபிணிபுண் - போக்கவுடல்

௨௯. பட்ட துணிபொருத்தப் பாற்றவினை மெய்ஞ்ஞான
மொட்ட வமைந்தசிலை யொன்பது - மட்டு

௩௦. மிரசதம்பொ னாரமில இந்திர நீலங்
குருவிந்தங் கோதில் வயிரம் - புருடரா

௩௧. கங்கலுழப் பச்சை கதிர்த்தவயி டூரியமென்
பொங்குமழை நல்குபொழி லொன்பதுங் - தங்கிற்

௩௨. றிசைமயக்கக் கல்விநலந் தேற்றமருள் சோரர்க்
கிசைவிக்கப் பல்வடிவு மேய்ப்ப - வசைவிலனார்

௩௩. மூங்கையுறப் பாதலத்தின் முற்றுபிலங் காட்டவுற்றோர்
தாங்கள்பிறர் காணத் தகுதிபெற - வோங்கொளிப்பொன்

௩௪. மாணிக்க மாரி பொழியவரஞ் சாவாமை
பேணிக் கொடுக்கப் பிறங்குபக - லேணிரவு

௩௫. மாறுபெறக் காட்ட வமைந்து வயங்கியிடர்க்
கூறுசெயு மன்ற மொருபதும் - பாறயிர்நெய்

௩௬. தேன்கருப்பஞ் சாறு திகழ்ந்தனநன் முத்திநெறி
வான்கதிமற் றேனையுல கத்துவழி - தான்கருதக்

௩௭. காட்டுவன சாயைபிணிப் பக்கலந்தோர் நிமயரா
மீட்சியுற வித்தின்றி மென்பயிர்க - ளீட்ட

௩௮. விளையந்தநறு நீரினவென் றெவ்வுலகும் போற்ற
வுயர்ந்தமணிக் கூவல்பதி னொன்றும் - நயந்துதன்பா

௩௯. லிட்டவெட்கு நெய்யொருபா லீயுந் தனிச்செக்குந்
தொட்டனபொன் னாக்குஞ் சுடர்ச்சிலையு - முட்டும்

௪௦. வினைப்பயனைத் தாமே விளக்குமொரு கல்லுந்
தனைப்பொருவுங் கற்பாவை தானு - மனைத்துமரு

௪௧. டாவா வயிரவனார் தாங்குநட னச்சிலம்பார்ப்
போவாது கேட்கு மொலியிடமும் - பாவாண

# வண்டுவிடு தூது

௪௨. ரெண்ணித் தளரவின்னு மீண்டுபல விம்மிதமு
மண்ணாற் கவுரியறச் சாலைகளும் - நண்ணிக்

௪௩. குடக்கோடி நீர்கரக்குங் கோணைநத மொன்று
மிடக்காம ரேரி யிரண்டுந் - தொடக்கீர்த்து

௪௪. முத்தியருண் மண்டபங்கண் மூன்று நிலநான்கு
மத்தன்மகிழ் புட்கரிணி யாங்கைந்து - முத்தமிழ்மூன்

௪௫. காத்தமத மாறுங் கடிநதிக ளோரேழு
மாத்தனருள் பீட மவையெட்டுஞ் - சாத்தர்களோ

௪௬. ரெண்மருந் துர்க்கையர்க ளெண்மருங் காளியர்க
ளெண்மருமாற் குச்சிறந்த வெட்டிடமும் - விண்ணவரும்

௪௭. பற்றியெழு வாரத்தும் பாய்ந்தாட மிக்குரிமை
யுற்றமணித் தீர்த்தங்க ளொன்பதும் - முற்றுமலம்

௪௮. போக்க வமைந்தசிவ புண்ணியங்கள் பத்துமவை
யாக்குமருண் மூர்த்தம் பதினொன்றுந் - தேக்குபுகழ்

௪௯. மந்திரமைந் தோடாறு மான நலனளித்துப்
பந்தமறுக் கும்பெயர்கள் பன்னிரண்டு - மிந்துமுடி

௫௦. வாய்ந்தவிறை யோன்பல் வளம்பதியு ளுஞ்சிறந்தே
ரேய்ந்த தலங்க ளிருபது - மாய்ந்துமையாண்

௫௧. முட்டா தெடுத்தவற முப்பத் திரண்டுமெவட்
கொட்டாய கோட்டமுத லொள்ளிடமு - மட்டேறுங்

௫௨. கோதைக் கடம்பன் குமரகோட் டம்முதலாந்
தீதற்ற பற்ப திருநகரும் - போதகத்துப்

௫௩. பிள்ளைப் பலதளியும் பீடுடைவெய் யோன்முதலோர்
கொள்ளுமுயர் தேவ குலத்திரளுந் - தெள்ளுபல

௫௪. தீர்த்தமுந் தேவர் திரளும் பிறவுநனி
கூர்த்த வளமுங் குடிகொண்டு - பார்த்தலையி

## கச்சிஆனந்தருத்திரேசர்

௫௫. லோங்கிய காஞ்சி யொருநகரா யங்ககரிற்
றேங்கிய தீர்த்தத் திரளாகித் - தாங்குமரு

௫௬. ளேகம்ப நாதரா யென்று மினிதிருந்தும்
பாகம் பலவான பல்லுயிர்க்கும் - மோகம்

௫௭. படைத்தமலந் தீர்ப்பப் பரிந்ததிரு வுள்ளந்
தொடுத்த கருணை துணைய - வடுத்தருளு

௫௮. மற்றுமொரு மூன்றுகம்பம் வாலீச நந்தீசம்
வெற்றி மயானம்விண்டு வேசமெழின் - மத்தள

௫௯. மாதவே சஞ்செவ்வந் தீசம் வருணேச
மாதலீ சந்திரு மாற்பேறு - தீதி

௬0. லனந்தபத்ம நாபேச மானவகத் தீசங்
கனிந்தகட கேசங்காப் பீச - முனைந்தவிரா

௬௧. மேச்சுரம் வெல்பராசு ராமேச் சுரமபிரா
மேச்சுரம் வாழ்விச் சுவநாதந் - தூச்சிலாத்

௬௨. தான நவக்கிரகே சம்யோகா சாரியர்சூழ்
தானமங்க ளேசந்தா னேதோன்றுந் - தான

௬௩. மிறவாத்தா னஞ்சுரக ரேசந்தீர்த் தேசம்
பிறவாத்தா னங்கச்ச பேச - நெறிக்காலைக்

௬௪. காடுசாத் தீசங் கயிலாயங் கற்கீச
மாடகே சஞ்சீ ரமரேச - நாடு

௬௫. மிரேணுகே சஞ்சவுன கேசங்கா மீசம்
பராசரே சம்பாண்ட வேசம் - வராக

௬௬. புரமணிகன் டேச்சுரநற் புண்ணிய கோடீச்
சுரஞ்சத்த தானஞ்சோ மேசம் - பரவுமிட்ட

௬௭. சித்தி யபிராப தேசமோ னன்காந்தன்
பத்திபுரி சூழல்பகர் முத்தீசஞ் - சுத்த

# வண்டுவிடுதூது.

கஅ. வநேகதங் காவதம்வா ணீசமந்த கேச
மிறுத லறுஞ்சலந்த ரேசம் — பறுதரே
கக. சம்பணம ணீசஞ்சார்ந் தாசயந் தக்கேசம்
வம்பில்சித் தீச மதங்கேச — நம்புமரி
எ0. சாப பயந்தீர்த்த தானமா லிங்கமா
தீபதே சம்விடுவச் சேனேசந் — தாபமறு
எக. வன்னீச் சுரநார சிங்கீச் சுரமாண்டு
கன்னீச் சுரமாகா ளேச்சுரம் — வன்மீக
எஉ. நாதம் பலபத் திரராம நாதமச்ச
நாதமுயர் முக்கால ஞானேசந் — காதம்ப
எங. மோத்தூர் சதுரா னைசங் கரமும்ப
ரேத்துமறை நூபுரங்கண் ணீச்சுரந் — தோத்திரிக்கும்
எச. வீரரா கேச்சுரநல் வீராட்ட காசஞ்சீர்
பாரளாஞ் சேறு பதீச்சுர — மேரளா
எரு. மேற்றளிசா ரோணம் விளங்கு பனங்காட்டூர்
போற்றுங் குரங்கணின்முட் டம்போக்கு — நீற்று
எசு. முருத்திரர் சோலையீ ரொன்பதின்மர்ச் சேர்த்த
வுருத்திரர் நூற்றுவர்க ளூற்றுக் — கருத்திசையப்
எஎ. பத்திபுரி நூற்றுப் பதினொண் டளிபிறவா
யத்தளிக டோறு மவிர்கின்ற — முத்துமுதற்
எஅ. பல்வகைப்பல் வேறு மணியினும பாய்கதிரோ
னெல்வகைமைக் கேற்ப விலங்கியாங் — கல்கலுறும்
எகூ. வெவ்வே றுருக்கொண்டு வேவ்வேறு பேர்கொண்டு
வெவ்வே றருள்கள் விளைத்தாலு — மெவ்வமறு
அ0. மானிடரின் வானவர்கள் வானவரின் மாமலரோ
னைவனின் மாயோ னவன்றன்னின் — ஞானமிகு

௮௧. மாதவர்க ளன்னவரின் மாகணங்க ளன்னவற்றிற்
சாதலறும் பூதத் தலைவர்க - ளோதவரிற்

௮௨. சேயிலைவே லோனவனிற் றிண்களப மற்றதனிற்
பாயமணி மேகலைய பார்ப்பதி - மீயுயர்ந்தாங்

௮௩. கேளையர்கள் போற்று மிடமூர்த்தந் தம்மினுமம்
மானனைய நோக்கி வழிபட்டுத் - தான்மகிழ்ந்த

௮௪. தூங்குசினை மாவடியுஞ் சோதிலிங்க முஞ்சிறந்த
வோங்குருத்தி ரேச வுயரிலிங்க - மாங்கவற்றோ

௮௫. டொக்கு முமையா ளுருப்பாதி தன்காணி
கைக்கொண்ட வேகன் கதியமுழு - மெய்க்கொண்டு

௮௬. நாமமுங் கொண்ட நலத்தகையோர் போற்றுதலிற்
காம ரவற்றுள்ளுங் காழிலோர் - தாமருவு

௮௭. மானந்த ருத்திரே சத்தமல மூர்த்தமே
தானந்த னேடுந் தலையாவ - தானந்

௮௮. தவிர்பொருள்கள் பற்பலவுந் தாழ்வில்சுக மற்று
மவிர்துறக்க மாதியவையு - மிவர்கின்ற

௮௯. மேலான வின்ப விளைவுந் தலைமைகளு
மாலாவ வென்று மதித்தொரீஇச் - சாலாத

௯௦. வானந்தத் தானந்த வின்றி யினிதெழூஉ
மானந்த மிக்களிக்கு மாட்சியாற் - றானந்த

௯௧. வானந்த நாம மளாவுலி னத்தகைய
வானந்த ருத்திரே சத்தென்று - மானந்த

௯௨. னேகம்பம் போல வினிதரசு வீற்றிருந்து
மாகம் பணிய வளங்கொழிப்போன் - மேகம்

௯௩. படியுமிளந் தெங்குப் பயில்கமுகஞ் சூதங்
கடிகொள் வருக்கை கதலி - யடரு

# வண்டுவிடு தூது.

௯௪. முருகு நரந்த முகிழ்தாடி மங்கள்
கருணைமஞ்ச ளிஞ்சி கலந்து - பெருகு

௯௫. வளங்கொள் படப்பை மருங்குடுத்துத் தீந்தேன்
றுளங்குமலர்ப் பிண்டிதொகு நாக - மிளங்கணிக

௯௬. ளார நறுந்தேக் ககில்சரள மாச்சாமந்
தாரமுருக் குத்தா தகிவெள்ளில் - வேரன்

௯௭. மருதுகுமிழ் போதி மகிழ்வழைபுன் னைகத்
தருவெவையும் வேலியெனச் சார்ந்து - முருகுவிரி

௯௮. மல்லிகை சாதி மயிலை குருக்கத்தி
முல்லை குளவி முதிர்செருந்தி - வில்லங்

௯௯. கணவிரங்கூ தாளங் கடுக்கை கடம்பு
மணம்விரிந்த நந்தியா வட்ட - மிணர்விரியும்

௫00. பாடல நீள்சண் பகந்தமா லங்கோங்கு
நீடிய நந்த வனநிரந்து - தோடுவிரி

௫0௧. தேங்கமல மொண்குமுதஞ் செங்கழுநீர் நீலநெய்த
லாங்கமலி பொய்கை யணியோடை - தேங்குபுனல்

௫0௨. வாவிநறுங் கூவன் மணற்கேணி வண்புனற்கா
றேவரும் வீழச் செறிந்தோங்கிப் - பூவைமயில்

௫0௩. கிள்ளைபுறுச் சேக்குங் கெழுமணிசெய் மாடநிரை
யள்ளுமெழின் மேடை யகன்றெற்றி - ஞெள்ள

௫0௪. றலைப்பெய்த வீதி தலைத்தலைநேர் போகி
மலைப்பெய்த யாறு மலிந்து - நிலைப்பெய்தி

௫0௫. வந்தொழுகும் வேக வதிமருங்கு வீற்றிருந்த
வந்தநெடுஞ் சூழ லதினின்றுஞ் - சுந்தரஞ்சேர்

௫0௬. வானுலக மேன்மைபெற மண்ணுலகஞ் செம்மாப்ப
வீனவிடர் முற்று மிரிந்தோட - வான

௧0௭. வறந்தழைப்ப வன்ப ரகந்தழைப்ப வன்பின்
றிறந்தழைப்பச் செல்வந் தழைப்ப - மறந்தழைத்த

௧0௮. வேற்கணா ருள்ளம் விடைகொள்ள நல்லுலா
வேற்குமா கொள்ள வினிதுறீஇ - மாற்குமால்

௧0௯. கொள்ளுந் திருவழகு கொண்டுவெவ் வேறுபல
வொள்ளிய வூர்தி யுவந்தருளி - நள்ளிடைநா

௧௧0. டெள்ளிதிற் காலந் தெரிப்போர் துயிலெழுப்பப்
பள்ளி யறைதணந்து பாவையொடு - மெள்ளப்

௧௧௧. புறம்போந் தருளிப் பொழிகதிர்மா ணிக்கத்
திறம்பூண்டு விண்ணோங்கு செல்வ - திறம்பூண்டு

௧௧௨. பன்மணி மாலைகளும் பல்கனி மாலைகளும்
பன்மலர் மாலைகளும் பைம்பொன்னின் - வின்மலிய

௧௧௩. வாக்கிய பூந்தொடையு மாடிகளுஞ் சாமரையுந்
தூக்கியகஞ் சுற்றிற் றுயல்கிற்பப் - பூக்கணமு

௧௧௪. மிக்க மருக்கொழுந்தும் வெய்யமரு வும்வேருந்
தொக்க படலை சுடர்ப்பட்டுத் - தக்கவெலாஞ்

௧௧௫. சித்திரித்த பட்டுஞ் செறிய விதானித்துப்
பைத்த மணிக்கம் பலம்படுத்துப் - பித்தியெலாங்

௧௧௬. கண்ணடியும் பாவைகளுங் காமர் மணிவிளக்கும்
வண்ணமலர்ப் பட்டும் வதிவித்துத் - திண்ணியதூண்

௧௧௭. வாருறைகள் சேர்த்து மருங்குமலி பூம்பந்
தாருமணித் தூண்க ளவைதோறு - நேருங்

௧௧௮. கதலிமடற் பூகங் கனிபலவும் யாத்து
மதர்வுவண்ணத், தூசு வயக்கிக் - கதிர்பசும்பொற்

௧௧௯. சுண்ணமுந் தாதுந் தொகுவிரையும் பன்மணியுங்
கண்ணகு பூவுங் கமழ்சாந்தும் - வெண்ணிறத்த

# வண்டுவிடு தூது.

க௨௦. வான்பொரியு மச்சுதமும் வண்கடுகுங் குங்குமமு
நானநறு நீரு நனிசிந்திக் - கானமென

க௨௧. நீண்ட கொடிநிறுவி நித்திலப்பொற் றோரணங்கள்
காண்டகைய சுற்றிற் கதிர்ப்பித்துப் - பூண்டகைய

க௨௨. பாவை நடமாடப் பல்லோ வியப்படங்கள்
கோவைபட வாங்காங்குக் கொள்வித்துப் - பாவு

க௨௩. படம்விரித்து நான்முகத்தோன் பார்த்தயிர்ப்பச் சேர்த்த
தடவுமணி மண்டபத்தைச் சார்ந்து - கடவுண்

க௨௪. மடங்கலணை யேறி வதிந்து பழைய
விடங்கவணி முற்றும் விலக்கி - யுடங்கமர்ந்த

க௨௫. பாவைமகி ழெண்ணெய் பயினெல்லி மாமஞ்ச
ளாவின்வரு மைந்து மளாவியது - தாவினறும்

க௨௬. பாறயிர்நெய் தேன்வெழுப் பைஞ்சாறு பல்லமிர்தம்
வீறு பலவிரத மென்கனிக - ளேறமிள

க௨௭. நீர்சந் தனக்குழம்பு நீவில் விரைநறுநீர்
கூர்சந்த வேதக் குருக்கலநீர் - சீர்தந்த

க௨௮. வெல்லா முறையி னினிதாடி மெய்யீர
நல்லா யிழைப்பட்டி னன்கொற்றி - வில்லார்

க௨௯. மணித்தலைநாண் கொண்டு வயங்கரையின் முற்று
மணிக்குயின்ற பொன்னுண் வயக்கித் - தணக்குமிச்சி

க௩௦. னுப்பட்ட கோவணமு னண்ணிடத்தி லொண்கிரணத்
தூப்பட்டுக் கோவணத்தைச் சூழ்வித்து - நீப்புறுவர்

க௩௧. கொம்பனையார்க் கன்றிவறங் கூரா வுறுப்பனைத்துஞ்
செம்பட் டுடையாற் றிகழ்வித்து - வம்புடைமேற்

க௩௨. செம்பொற் கிரணச் செழுந்தா சிருபாலும்
பம்புற்ற தொங்கல்பயி லச்சாத்தி - நம்புற்ற

௧௩௩. குங்குமங் கோரோசனைபுழுகு கத்தூரி
பொங்குகருப் பூரம் புதுப்பனிநீ - ரெங்கும்
௧௩௪. விரைக்கக் குழைத்தெடுத்த மென்னறும்பூஞ் சாந்தம்
வரைக்குநிகர் மார்ப மெழுகித் - திரைக்கு
௧௩௫. மதுமலர்ப்பூந் தாது மணிதகர்த்த சுண்ண
மதிகவிரைத் தூளியுமே லட்டிக் - கதுவுபுன
௧௩௬. வீரம் வறள வியம்பு புகையைந்துஞ்
சாரன் மழையிற் றவழ்வித்துப் - பாரக்
௧௩௭. கருநீற வாருயிர்க்குக் காசற்ற கற்பத்
திருநீறு நெற்றி திருத்திக் - குருநீ
௧௩௮. றழியாது பாங்க ரடியருளந் தோறு
மொழியாத் திலக முறுத்துப் - பொழிசீதக்
௧௩௯. கங்கைமக ளோடு கலைமதியஞ் சேர்ந்திருந்த
றங்கு மிடமுறையிற் சான்றாலு - மங்கே
௧௪௦. விதிர்க்கு முலகர் விழிக்கொளிப்பான் போலக்
கதிர்க்குமணி மோலி கவித்துக் - கொதிக்குமொரு
௧௪௧. கொக்கிறகோ வென்னக் குருவயிரங் கைசெய்த
தொக்ககதிர்ச் சூட்டுச் சுடர்வித்துத் - தக்கதந்தை
௧௪௨. தாயுந் தளரச் சரந்தொடுக்குந் தீக்கடவுட்
காயுங் கடவுள் கதிர்ப்பெய்த - லேயுமஃ
௧௪௩. தென்றாலுந் தீயார்க் கிடங்கொடா ரென்பதற
வென்றாலும் பட்ட மிளிர்வித்து - நன்றே
௧௪௪. களிக்குமுடன் மாயுங் கரிசடுத்தா ரேனு
மளிக்குணத்தா ரங்கமழி யாமை - தெளிக்குதல்போல்
௧௪௫. வெற்றி மதனுயர்த்த வெய்யகொடி வீற்றிருந்த
கொற்ற மகரக் குழையணிந்து - பெற்றசுக

கசசு. நல்லா ரிடத்திற் பிறந்தாலு நல்லார்தாஞ்
செல்லா விடத்திற் செறித்தாலும் - பொல்லாதார்

கசஎ. பண்பிற் றிரியாப் பரிசேபோ லாலாலங்
கண்பொத்து நீலக் கறைமிடற்றுத் - திண்புலத்தார்

கசஅ. மீட்டுமொரு சூழ்ச்சியினவ் வெய்யோரை மாய்ப்பதுபோ
லீட்டுமணிக் கட்டுவட மேய்வித்து - வேட்டுழல்சிற்

கசகூ. றின்பினர்க ளின்ப விழைவேயென் றேமாப்ப
வன்பினர்க ளாரா வருளென்னுங் - கொன்பல்

கரு0. வளைத்தழும்புங் கொங்கை மணிச்சுவடுங் கண்க
டிளைப்ப வெளிச்சிறப்ப வேனு - மளிப்பின்

கருக. றிருவர்பா லெய்தார்க ளெண்ணமெண்ணி யாங்குக்
குருமணிக்கே யூரந்தோட் கோத்து - மருமத்துப்

கருஉ. பொன்னரி மாலைகளும் பூவினறுந் தொங்கல்களு
மின்னகு மொன்பான் வியன்றொடையு - நன்ன

கருங. ரிலைமுகப்பைம் பூணு மிருங்கண்ணித் தாருங்
குலவுசெழுங் கொன்றையொடுங் கூர்த்திட் - டுலகமெலாங்

கருச. காப்புக் கமைந்ததற்கோர் காப்பின்றே யாதலிற்பொற்
காப்புக்குங் காப்புக் கரமாக்கி - நீப்பிலொற்றை

கருரு. யாழி யுருட்டு மகங்கை விரறொறு
மாழி பலபூண் டவிர்வித்துப் - பீழை

கருசு. கழல வினைகள் கழல மலங்கள்
கழலக் கழல்கழற்கால் வீக்கிக் - கழலமுன்னர்ப்

கருஎ. போதந் தொளித்த புரையோனைக் கொன்றுபுவி
மீது தனைவிளங்கு வித்ததிறன் - மாதவனைத்

கருஅ. தாட்கவைஇக் காணவினிச் சாரென் றழைப்பனபோ
லார்க்கு மறைநூ புரமணிந்திட் - டேற்கவின்னும்

# கச்சி ஆனந்தருத்திரேசர்

கசகூ. வேண்டு மணிபலவு மெய்ப்படுத்து வெங்கதிரோன்
காண்டகு மண்டிலத்துக் கண்ணுற்று - மாண்டதனை
கரு0. தேர்விளக்கி யாங்கரவுண் டீனுமதி போலுறைபோய்ச்
சீர்விளங்கு மாடி தெரிந்தருளிப் - பார்துளங்கப்
கருக. பல்லியங்க ளார்ப்பவிரு பாற்கவரி துள்ளமணி
வில்லுமிழ் வெண்கவிகை மேனிழற்ற - மெல்லமெல்ல
கருஉ. வேத்திரத்தின் கையர் மிடைசனநீக் கக்கொடுபோ
யாத்த வெழினி யிடம்வீழ்த்து - மூத்தவன்பின்
கருங. வைத்தநறும பாளிதமும் வண்டயிர்நெ யக்கார
மெத்து சுவைப்பயறு மென்கடுகு - பொத்து
கருச. புளிமுதல்வெவ் வேறுவிராய்ப் போக்கின் றமைத்த
மிளிரமுதும் வெற்ற வமுது - மொளிர்கருணை
கருரு. பாகு துவையல் பலவறைய லாதிகளும்
பாகமுற ஆறும பலகாயும் - மாகமுஞ்சென்
கருசு. றூர்கடிய நோலை யடைநெய்க் களிமிதவை
வார்கழையின் பாகு மணற்பாகு - சீர்கலவுஞ்
கருஎ. சிற்றுண்டி பற்பலவுந் தேநீ ரிளநீரவா
ருற்ற கழைநீ ருறுநீர்மோர் - பொற்ற
கருஅ. பலகனியின் சாறுநறும் பாறயிர்தேன் மற்றுங்
கலவு மருளாற் கரந்தொட் - டிலகு
கருகூ. கலங்கழித்துக் கைபூசிக் காமர் கவுளி
னலங்குபஞ்ச வாச மடுத்துத் - துலங்குபட்டி
கஎ0. ஞனை நீவி யரும்புகைபஃ றீபவகை
யூனமினீ ருடி யொளிர்கவிகை - பானிறத்த
கஎக. சாமரை யாலவட்டஞ் சாந்தாற்றி பற்பலவு
மேம முறவினிது கொண்டருளி - நான்மறையு

௧௭௨. மன்பர் தொடுத்த வருந்துதியும் பல்லியமு
முன்பு தொடங்க முறையாற்கேட் - டின்பக்

௧௭௩. குலமுருக்கொண் டாலன்ன கோதையர்நேர் நேரே
கலவி நடமாடல் கண்டு - சுலவியெழுங்

௧௭௪. கற்பூர தீபமெதிர் கண்டடுத்தோர் யாவர்க்கும்
பொற்பூரு நீறு புரிந்தருளி — யற்பூறுங்

௧௭௫. காமன் குடைக்குக் கலைநிரப்புஞ் சென்னிமதி
வாமக் கலைகண் மலிந்தெழுந்து - சேமக்

௧௭௬. குளிர்நிரப்பிற் றென்னக் குருமணிகால் யாத்த
வொளிநிரப்பும் வெண்கவிகை யோங்கத் - துளிநிரப்புங்

௧௭௭. கங்கை நதியைக் கரந்த பெரும்பகையாற்
றுங்கக் கடற்றலைவன் றூண்டிதலும் - பொங்கிப்

௧௭௮. பொரவெழுந்த வெண்டரங்கம் போன்மெனவெப் பாலுஞ்
சுரர்மகிழ்ந்த சாமரைக டுள்ள - வந்தரங்கங்

௧௭௯. கண்டு பொரனுமக்குக் காரியமன் றென்றாககங்
கொண்டு விலக்குங் குறிப்பேபோ - லொண்டரளஞ்

௧௮௦. சுற்றி னழுத்திச் சுடர்விரிக்குஞ் சாந்தாற்றி
பொற்றமணி யாலவட்டம் போந்தசைய - வெற்றி

௧௮௧. விருது பலமுழங்க வெண்சங்க மார்ப்ப
விருபுறமுந் தாரை யிரங்கக் - கருவிநிறை

௧௮௨. பாவலர்க ளுவலர்கள் பல்கவிதை யேத்தெடுப்பப்
பாவலர்க டங்கள் பணிசெய்யக் - காவலர்க

௧௮௩. ணீதி பிறழாமை நின்றே வலரேவ
லாதி நடத்தி யருகுவரப் - போதுசொரிந்

௧௮௪. தாவலங் கொட்டி யடியார் குலங்களிப்ப
நாவலந் தீவு நனிசிறப்பப் - பூவலய

கஅரு. மெத்திய வெய்யோன் விழுக்கிரணம் பாவாம
ணித்தில வூர்தி நிழல்செய்ய - நித்திலத்த
கஅசு. மாலைக் கவிகை மழுகதிரோ னோர்கவிகை
சாலக் கதிர்க்குந் தனிப்பிச்சங் - கோலக்
கஅஎ. கொடிநிரையும் பல்காடு கூர்ந்ததென வாரக்
கடிநிரைத்த காவணத்தி னின்று - நெடிதெழுந்து
கஅஅ. பல்லுறுப்பு முற்றிப் பசும்பொன் குயின்றமணி
யல்லிறுக்குங் கோயி லகத்துலாய்ச் - செல்லிறுக்குங்
கஅகூ. கோபுர வாயிற் குழாங்கண் டுளங்களிப்ப
மாபுர வீதி மருங்கெய்தி - யாபுரத்தி
ககூ0. லேவுற்ற பொற்சிலைகே ரெய்துவதோ வென்னநனி
மூவுற்ற செம்பொன் முழுத்தேரிற் - பூவுற்ற
ககூக. சிங்கத் தவிசிற் றிகழ்ந்தேறி யைங்கரன்முன்
றுங்கக் குலத்தேர் துனைந்தூர - மங்கையுமை
ககூஉ. நன்னர்க் கடம்ப னவையில் விறற்சண்டன்
பின்னர்ப் பொலந்தேர் பெரிதூர - முன்னர்
ககூங. வரத்தி னருள்பெற்ற மத்தளமா யோன்றன்
கரத்தினனி யொத்திக் களிப்ப - நரைத்தலையோன்
ககூச. றாளம் பிடிக்கத் தனிவிசும்பு காவலோன்
வாளம் பிடித்து மருங்கணைய - வேளம்
ககூரு. பிடித்தறியார் செவ்வைதிரை யீந்து தனதன்
பொடித்தநறும் பாகடைப்பை பூணக் - கடித்தேன்
ககூசு. றுளிமலர்மேல் வாசந் துதைந்துகுளிர் கொண்டு
வளியிளங்கா லாய்மருங்கு வாவ - நளிகொ
ககூஎ. டனிநீர்க் கடற்றலைவன் சார்ந்திறைநவர் மெய்யிற்
பனிநீர்த் திவலை பனிப்பக் - கனிதே

கசுஅ. மதுபருக்கம் பான்மற்றும் வந்தடியா ருய்ப்பக்
கதுமென வெய்யோன் கனலி - விதுமூவர்

கசுசு சுத்தி புரிந்து துணைக்கை யிடையேந்தி
யத்த நுகர்கென் றளித்துவர - வெத்திசையும்

உ00. போற்றுயரீ சானன் புனிதனருள் பெற்றெய்தி
யேற்றுமிசை யேற்றுக் கொடியுயர்ப்ப - வாற்றுபணி

உ0க. நீக்கிக் கழியு நிலையினரை நன்னெறியிற்
றாக்கி யியமன் றலைநிறுவப் - போக்கின்றி

உ0உ. மற்றை யமரர்களு மாநகரி னாட்சியரு
முற்ற தொழின்மை யுளுற்றிவர - முற்று

உ0ங. மிரவுபகல் காட்டு மெறுழுருளை மான்றேர்
வரதன் மணிவீதி வந்தான் - புரவளிக்கு

உ0ச. மந்திர சாலை யமுதடு சாலையா
வைத்த தனிச்சே வகன்வந்தான் - பைத்தமணி

உ0ரு. நாகமு நீள்கோட்டு நாகமுஞ் சூழ்ந்திருப்ப
மாகரும் போற்றுமுடை யான்வந்தா - னாகும்

உ0சு. பரிசமுருக் காண்டல் பகர்கேள்வி யோர்பான்
மருவுமணிப் பூணினன் வந்தான் - பரவை

உ0எ. யலைத்துப் புவிபெயர்த்திட் டந்தரத் தோங்கி
மலைத்த விடைக்கொடியான் வந்தா - னிலைத்த

உ0அ. கடவுளர்தம் மாதர் களம்வறங்கூ ராது
மிடல்படைத்த நன்மிடற்றான் வந்தான் - படர்கரும

உ0கு. மீட்டா ருயிர்விழிக ளெல்லா முருக்காணக்
காட்டாகு முக்கண்ணி னன்வந்தான் - வேட்டதரு

உகO. ளானந்த ருத்திரத்தெம் மண்ணல்வந்தா னென்றேதை
வானுந்து சின்ன மலிந்தூத - ஞான

உகக. வுறுவ ருவவும் பனவ ருவவு
மறைக ளொலியின் மலியச் - செறியு

உகஉ. மதலே நிரையின் வரிசை யெனத்தின்
மதமைக் களிறு மருவப் - பிதிருந்

உகங. திரையி னிரைக டிரள்வ தெனப்பல்
பரியி னிரைகள் படரப் - பெரிய

உகச. பகடு கடவிப் பரவு மரையர்
மகுட நிரைகள் வயங்கப் - புகரில்

உகரு. கடவுண் மகளிர் கலவி முறையி
னடன வகைக ணவிலப் - படகம்

உகசு. பதலே முருடு பணவ முழவ
முதல பலவு முழங்க - மதிவெல்

உகஎ. வளைகள் குழல்கள் வயிர கணரம்பின்
கிளைக ளினிது கிளர - வொளிசெய்

உகஅ. மடல்கொ டருவின் மலரி னமரர்
படியிற் றிடறு படிப்ப - வடிய

உகக. ருதவு கனக மழையொ டுதவு
முதக மதனே யொழிப்ப - மதவொண்

உஉ0. பொழில்கண் மழைகள் பொழிவ தெனப்பொன்
செழிபன் மணிகள் சிதறப் - பொழியுங்

உஉக. கனிகள் கழையின் றுணிகள் பொரிகள்
சனமெய்த் தலையிற் றதையக் - கனக

உஉஉ. தருவுங் கொடியுந் ததையப் பதணே
நிரையு மெவரு நெருங்க - விரவு

உஉங. மனிதர் குலமு மலர்வ தெனப்பல்
புனித மரமும் பொலிய - வினிய

# வண்டுவிடுதூது.

உஉச. புகைவிண் பொதியப் பொழிசெங் கிரணப்
பகல்செ லிரவிற் பயில - நிகழு

உஉரு. மிருளை யிழையி னொளியு மிரத
வுருவி னொளியு மொறுப்பத் - தனையின்.

உஉசு. வணங்கிடை மங்கையர் வண்ட லிகந்து
சுணங்கிவர் கொங்கை துளங்க - விணங்கி

உஉஎ. மணந்தவழ் தொங்கன் மணந்து குழன்று
வணர்ந்து சுரிந்து மலிந்து - தணிந்து

உஉஅ. பொருந்தள கங்கள் சரிந்து சரிந்து
வெரிந்தலை யொன்றி விளங்கப் - பரந்து

உஉகூ. நெருங்கிய கொங்கை நிலந்திவள் வம்பு
மருங்கொளி யுந்து வடங்க - ளொருங்கு

உகூ0. செழுந்தொடை யொன்றனொ டொன்று செறிந்து
விழுந்து தவழ்ந்து விலங்க - வெழுந்து

உகூக. பணிந்த நிதம்ப மணிந்த வடங்கள்
பிணைந்து தழங்கல் பிறங்க - நிணைந்து

உகூஉ. கிடந்து சிலம்பு சதங்கை கிளர்ந்து
நுடங்கிடை நொந்தது நொந்த - திடங்கனி

உகூகூ. டிருந்தெழு கென்று விளம்புவ தென்னத்
திருந்தடி நின்று சிலம்ப - விரைந்து

உகூச. நடந்து தொடர்ந்து நனந்தலை இருள்ளன்
மிடைந்து சனங்கள் விலங்கப் - படர்ந்து

உகூரு. புகுந்தெதிர் நின்று பொழிந்தலர் செங்கை
முகிழ்ந்து சிரங்கொடு முந்தி - நெகிழ்ந்த

உகூசு. வுளங்கொ டிறைஞ்சி யுவந்து நிமிர்ந்து
துளங்கி மருங்கு துவன்ற - வளங்கொள்

உ௲எ. விசும்பர மங்கையர் விண்ணிட மெங்கு
மசைந்தலர் சிந்தி யணைங்கக் - கசிந்தெவரும்

உ௲அ. போற்ற நெடுங்கொடியும் பூந்தோ ரணத்திரளுந்
தோற்றிய மாடந் தொறுந்தீப - மேற்றிநறும்

உ௲௯. பூரண கும்பம் பொருத்திநறு நீர்தெளித்துக்
காரணவ வோங்குநடைக் காவணமிட் - டேரணவும்

உசo. வீதி யிடைக்கடவி வெய்தெதிரோ தோற்றுதலும்
போதுமட மாதரொடு போந்தேனு - நாதன்

உசக. கருணை பொழிமுகமுங் காதலெலாம் வல்லே
யருள வலர்ந்த விழியும் - பரிதிபல

உசஉ. கோடி யொருங்கு குழீஇயனைய செக்கரொளி
நீடு முருவினிறை கோலமும் - பீடு

உசரு. மழுமான் றரித்து வயங்குமிரு கையு
முழுவான் பயத்தை முனிந்து - செழுவான்

உசச. வரம்வழங்க வைத்த மலர்ந்தவிரு கையும்
பரம்வழங்கு பாதத் துணையு - முரங்கிடந்த

உசரு. கேழில் பிரணவம்போற் கேசரங்கொண் டேமலர்ந்த
கேழிதழித் தாரின் கெழுதகையும் - வாழிநனி

உசசு. கண்டேன் புரிமுறைமை காணேன் கதழ்வினுளம்
விண்டேன் வெதும்பி மெலிந்தனேன் - றண்டாப்

உசஎ. புகுமுகம்யான் வீழப் பொழிகருணை காட்டி
நகுநயமு நல்கினு னேனும் - தொகுதவத்து

உசஅ. ளேது குறையுளதோ வெம்பெருமான் முன்கருதுந்
நீதி திருவிளையாட் டோவறியேன் - மாதவற்குச்

உசகூ. சங்காழி முன்னிங்குத் தந்தாரென் பார்கவர்ந்த
சங்காழி யென்கைத் தரவிளையா - ரிங்கே

௨௫௦. கலையொருவர்க் குய்த்தளித்தா ரென்பார் பறித்த
கலையெனக்கு நல்கக் கடுகார் - விலகவிங்கு

௨௫௧. வேகவதி நீர்தடுத்தா ரென்பா ரெனதுவிழி
வேகவதி நீரை விலக்கிலார் - மாகளங்க

௨௫௨. மேனிப் பசப்பரிக்கு வீத்தாரென் பாரெனது
மேனிப் பசப்பரிக்க மேவிலா - ரூனவிட

௨௫௩. வெப்பொழிய விண்டுவைத்தம் பாணிறுவி னாரெனது
வெப்பொழியப் பாணிறுவ மேவிலா - ரொப்பனையாட்

௨௫௪. சாகங் குழைந்தா ரளியேன்றன் பார்குறுகு
மாகங் குழையு மருளிலார் - சாகரத்தைத்

௨௫௫. தாக்கியன்று சாஞ்சி தலைக்காத்தா ரின்றுமது
தாக்கியெனைக் காப்பத் தயையிலா - ரோக்கியசெங்

௨௫௬. கல்லெறிக்குத் தம்பாதங் காணிகொடுத் தாரென்க
ணல்லெறிக்குத் தந்திணிதோ ணல்கிலார் - வல்லி

௨௫௭. யறமுழுது மாக்க வமைத்தாரிக் காம
வறமொன்றுந் தாமாக்க வண்ணா - ருறுவெட்புக்

௨௫௮. கண்ணனுக்கிங் கானந்தங் காட்டினார் காதலித்தேற்
கெண்ணனுக்கு மானந்த மேய்த்திலார் - கண்ணனயன்

௨௫௯. பூமகளிர் தம்மைப் புணரவளித் தாரிங்கிப்
பூமகளேனைத்தாம் புணர்கிலா - தோமிலாக்

௨௬௦. காப்பு நடனமிங்குக் கைக்கொண்டா ரென்னாவி
காப்பவுளஞ் சற்றுங் கடைப்பிடியார் - யாப்பு

௨௬௧. மறைபுறத்தே செல்லாமை மீட்டுவெளாத் தாரென்
மறைபுறத்தே செல்லாமை வையாரா - குறுகொருவன்

௨௬௨. புண்ணுருவ மாற்றிப் புரவளித்தா ரிங்கெனது
புண்ணுளத்தை மாற்றிப் புரவளியா - ரெண்ணி

உசுரு. விடர்துமித்தன் மூத்தபிள்ளைக் கேய்த்தா ரெனக்கோ
ரிடர்துமிக்கத் தாமிங் கிசையார் - படருமிரு

உசுச. மாலாரைத் தம்முருவா வைகுவித்தா ரிங்கடுத்த
மாலேனைத் தம்முருவா வைகுவியார் - மாலோ

உசுரு. டலருடையா னைத்தோ ளணைத்தார்மா லோடிங்
கலருடையே னைத்தோ ளணையார் - குலவுகற்ப

உசுசு. காலத்துங் காஞ்சி யழியாமை காட்டினரிக்
காலத்தென் காஞ்சிதனைக் கட்டழித்தார் - கோலத்தங்

உசுஎ. கைப்பட்ட மென்றுரும்பாற் காமருவின் ஞோர்தூண்டு
மொய்ப்பட்ட வெம்படைகண் மொத்தினார் - மெய்ப்பட்ட

உசுஅ. வெல்லுருவ முற்றும் விராய்நிறைத்த வென்னுள்ள
வல்லிரும்பைப் பூவின் மலக்கினார் - வெல்லெரியின்

உசுகூ. மூவ ருடல்குளிர்ப்ப முன்னினார் தண்மதிக்கெ
ஞேவி லுயிர்வெதும்ப வுன்னினார் - மேவுதலும்

உஎ0. பொய்யழிய வேதவியா சன்மையல் போக்கினார்
மெய்யழிய வென்கண்மயல் வீக்கினார் - வெய்யவுரு

உஎக. சாப மவரவர்க்குச் சாய்த்தார் கழையாய்
சாப மெனக்குத் தகவைத்தார் - கோப

உஎஉ. மகர வலிதொலைத்தா ரம்மகர மைந்தன்
மகர வலிவளர வைத்தார் - புகழ்வையஞ்

உஎரு. சுத்தி யொருதடத்துத் தோற்றினார் யான்சுத்தி
முத்த மிகழு முறைவைத்தா - ரொத்த

உஎச. வயிரா பதத்தி னருள்வைத்தார் யாரு
மயிரா பதத்தினருள் வையா - ரயராமைப்

உஎரு. பாலுததி யோர்முனிக்குப் பாலித்தா ரிங்கெனக்குப்
பாலுணவு வேண்டாப் பகைசெய்தார் - சால

உஎசு. விரவு தமக்குரிமை யாக்கினா ரென்பார்
விரவிகல்வ தாக விசைத்தார் - பரவு

உஎஎ. மதிசயித்த வைந்தடத்தோ டாருமெனை யெண்ணி
யதிசயித்த வாறுதட மென்ன - வதனா

உஎஅ. விந்தம் விழிக்குவளை மென்முகையும் பூவிரிவு
மந்தி பகலுமுற வாக்கினா - ரிந்தமுறைக்

உஎகூ. கோட்டிபுரி கின்றார்முன் கோதற்ற நூன்முறையின்
வேட்டடியிற் பூசை விளைத்தவர - மீட்டியநற்

உஅ0. காமனை யிங்குக் கடிவரோ பூசைபுரி
சோமனைக் காதத் துணிவரோ - பூமலியக்

உஅக. காலிறைவன் றாவிக் களித்தலான் மெல்லவருங்
காலினை யிங்கே கழிப்பரோ - கோலவிழிற்

உஅஉ. சேவினிது பூசைபுரி செய்கையான் மற்றிங்குச்
சேவின் மணியைச் சிதைப்பரோ - பூவியப்ப

உஅ௩. வாண்பெண்மை யாக்கினா ரப்பெண்ணை வாழன்றின்
மாண்பின்மை யாக மதிப்பரோ - காண்பினிய

உஅ௪. மாவடியின் வாழ்க்கை மருவினா ரம்மாவிற்
கூவு குயிலைக் குமைப்பரோ - வாவதில

உஅரு. னன்னேயென் றென்னைத் திரங்கினே னங்ஙனே
கொன்னேன் யுறுதி குறிக்கொண்டேன் - முன்னே

உஅசு. யரிதாழ்ந் தயனோ டளிப்பவுலகேத்தி
யரியோ டுலகயனு மின்றான் - கருட

உஅஎ. னிகலோ டரவலைத்தா னேத்தியர வேத்திச்
சுகமே கருடவெனச் சொற்ற - திகலின்

உஅஅ. றிரணியன்பூ சிப்பவர மீந்தார்பூ சித்த
நரமடங்க லாக்க நயந்தார் - பரவியொரு

உஅகூ. வாணன்பூ சிப்பநொச்சி வாயில்காத் தார்நேமிப்
பாணிபூ சிப்பவவன் பாடழித்தார் - மாணவர

உகூ0. மந்தகன் பூசைக் களித்தா ரவனையொரு
மைந்தனைவிட் டாருயிரை வாங்கினர் - மைந்து

உகூக. சலந்தரன்பூ சிப்பத் தகவளித்தார் தாமே
சலந்தகவன் ஞனுயிரைச் சாய்த்தார் - வலந்தொழுத

உகூஉ. கச்சபத்துக் கீந்தார் கடலலைப்ப வைங்கரற்கு
வெச்செனத் தாக்கும் விடைகொடுத்தார் - மச்ச

உகூரூ. நயக்கவர மீந்தார் நவைகண்டு வாட்கண்
புயக்கவொரு மைந்தனைப்போ வித்தார் - வியக்கவரம்

உகூச. வன்றிக் களித்தார் மறலமருப் புப்பறித்தல்
வென்றிக் குமரற்கு மேவித்தா - ரொன்றுவரம்

உகூரு. வாமனனுக் கீந்தார் வயக்கவயந் தண்டவனோர்
மாமகனுக் காக மகிழ்சிறந்தார் - நாம

உகூசு. நரமடங்கல் போற்றவர நல்கினர் மைந்தன்
சரபமெனத் தாக்கமகிழ் சாரந்தார் - விரகவர்பா

உகூஎ. லிவ்வா றிருத்தலா லெண்ணி லடுத்தயர்ப்பி
னெவ்வாது சேட்படுத லுண்மையா - லெவ்வாறுந்

உகூஅ. தீங்குபுரி மாரன் செழுந்திங்க ளாதியொரீஇப்
பாங்கெனக்கு நல்கப் படர்வரே - யீங்கென்று

உகூகூ. மிட்டசித்தி நாத ரெனவிருப்பார் மற்றெனக்கு
மிட்டசித்தி யாக்க விசைவரே - விட்டவொரு

ரூ00. பூவுக்குங் கண்வாங்கும் புண்ணியனார் நொந்தவென
தாவிக்குங் காவ லமைப்பரே - மேவியிங்குப்

ரூ0க. பன்னாளும் வைகும் பயனுற்றம் மோடொன்று
வெந்நாளும் வாழ்க்கை யிசைப்பரே - பன்னாளுந்

௩௦௨. த்திரண்டி னுமிங்குச் செய்திருந்தே னையிடினுந்
த்தேவர்க்கு மிங்குத் திருப்பணியாய் - மேதகுமா

௩௦௩. றாக்குவார் தம்மையுளத் தாக்கு மளியேற்கு
மாக்கி யணைய வமைவரே - போக்கென்

௩௦௪. றறியாப் பருவத் தடிபிழைத்தே னேனும்
பிறியாக் கருணைப் பெருமான் - குறியாத

௩௦௫. தக்கனிங்குச் சாரத் தவறு தவிர்த்தவற்கு
மிக்க தலைமை விளைத்திட்டார் - தொக்கதமக்

௩௦௬. கன்பனைப் பாழ்மதத்தி லாழ்த்தினோர் நண்ணுதலுங்
கொன்பெரும் பாவங் குறைத்திட்டார் - முன்பிருவர்

௩௦௭. யான்முதன்மை யான்முதன்மை யென்றிகழ்ந்தா ரெய்துதலுந்
தான்முதன்மை யென்னத் தவறழித்தார் - பான்மை

௩௦௮. திரிந்தொட் டகவடிவாய்ச் சேர்சனற்கு மாரற்
கரிந்துபிழை யெவ்வரமு மார்த்தார் - பிரிந்தவளத்

௩௦௯. தாழ்கடைந் துங்கடுவை யாரக் கொடுத்துமுற்ற
பீழையம ரர்க்குப் பிரித்திட்டார் - வாழ்முன்னாத்

௩௧௦. தக்கனொடு கூடித் தவறிழைத்த விண்ணோர்க
டொக்கடைய நன்மைச் சுரப்பளித்தார் - மிக்கமர்த்த

௩௧௧. வாளவுணர்த் தாம்வெல்ல யாம்வென்றோ மென்றிகலி
யாளமரர் சார வருள்கொழித்தார் - தோளிணைகள்

௩௧௨. கண்டூதி நீவ வறைகூவுங் காழவுணன்
றுண்டுற மீட்டுநலந் தோற்றினார் - பண்டேவல்

௩௧௩. கண்டு றுவணற்குக் காட்டாப் பிழையன்றி
விண்டேறு வாழவருள் வீக்கினார் - வண்டூதுந்

௩௧௪. தேங்கடப்பந் தாரான் றிருவருளி னேவலினை
நீங்கி யணையவரு ணீடினார் - ரோங்கன்

௩௧௫. மகள்வாள் விழிபுதைத்து வந்தடிமை செய்யத்
தகவான் கலப்புத் தரித்தா - ரிசைவாத

௩௧௬. வித்தகைமை மிக்கார்மற் றென்னையுந் தண்ணருளின்
வைத்தடிமை கொள்ள மதிப்பரென - வொத்தெழுந்தேன்

௩௧௭. றாதொருவர்க் காகத் துணிந்தார் தமையடுத்த
தூது வறிதாகச் சூழ்கலா - ராதலினற்

௩௧௮. றூதுவிடற் பாணித்தல் சூழா ரெனத்துணிந்தேன்
போதுநெகிழ்த் தூதும் பொறிவண்டே - தாதளாய்ப்

௩௧௯. பில்குமது வுண்ணும் பிரமரமே மென்மலரின்
மல்கு மமளி மதுகரமே - நல்குமிசைக்

௩௨0. கானம் பயிலுங் கருஞ்சுரும்பே பூஞ்சோலைத்
தானம் பயிலுந் தசைஞிமிறே - மானமிகு

௩௨௧. சிம்புளுக்கு மஞ்சாத் திறலரியே சீறிவரும்
வெம்பரிக்கு மஞ்சா விறற்றும்பி - வெம்புலிக

௩௨௨. டாக்குதற் கஞ்சாத் தனிமாவே குட்டிதழீஇ
யூக்குதல்செய் யாத வுயர்மந்தி - யேக்குலங்க

௩௨௩. டாங்கி யுகையாத சாகமே வில்லுதைப்பத்
தீங்கு புரியாச் சிலீமுகமே - யோங்குரிமை

௩௨௪. நெஞ்சத்தைத் தூண்டுவோ மென்னி னெடுவீதி
மஞ்சன் மணித்தேர் மருங்கெய்தி - யென்செய்தி

௩௨௫. கேட்கவெனத் தாழ்ந்து கிளப்ப முயன்றுபல்கான்
மீட்கப் பதமின்மை மேவலாற் - றுட்கமலங்

௩௨௬. கண்டுகொண்டே யண்ணல் கவின்வீதி தோறுமுலாக்
கொண்டருளிக் கோயில் குறுகிமணி - மண்டு

௩௨௭. முவளகத்திற் செல்ல வுடன்சென்ற தாங்கு
மிவறியது கூறவிட மின்றிக் - கவலுவதே

௩௨௮. போலுமத னாலின்னும் போந்ததிலை போந்திடினு
மாலுவது மீட்டும் வழங்காதே - சாலவிங்கு

௩௨௯. நன்றுறத்தப் போத னயந்தாலும் பல்புலனுஞ்
சென்றுசென்று பற்றுதலுஞ் செய்யுமே - மன்றவங்கே

௩௩௦. பூண்டபெருங் காரியத்தைப் பொச்சாத் தலுங்கூடு
மாண்டதன்று தூதுக்கு மற்றதுதான் - காண்டகைய

௩௩௧. வன்னத்தைத் தூண்டின் மறையன்ன மன்றொருபொய்
சொன்ன பிழையாற் றொருமன்ன - மென்னவு

௩௩௨. நம்பர் திருவுள்ள நாடுவன வல்லவன்றிக்
கொம்பனையாட் கன்னக் குருகன்றே - நம்பலுறு

௩௩௩. மூர்த்தி யஃதினை யுய்த்தறியின் முற்றுமை
சார்வது முண்டு தகவன்றே - சீர்வதியுங்

௩௩௪. கிள்ளையைத் தூண்டிற் கிளந்தவலா லெங்குறைக்குக்
கொள்ளக் கிளவாத கொள்கைத்தே - யொள்ளிழையாள்

௩௩௫. கைக்கிள்ளை யிக்கிள்ளை காணினுங் காரியந்தான்
பொய்க்கு மதுவும் பொருந்தாதே - மெய்கருமொரு

௩௩௬. பூவையைப் போக்கிலது போநெறியிற் கண்டோர்கண்
மேவினர் பற்றின் விடுதியின்றே - மேவவொரு

௩௩௭. நன்புறவைத் தூண்டினது நாளுந்தூ துண்டொழிக்கு
மென்புறத்துத் தூதாக வெண்ணுமே - துன்பறியா

௩௩௮. வன்றில்குயி றென்ற லவைவிடின்மா றுப்பகையா
யொன்றுவன தூதா யுதவுமே - யன்றியுங்கே

௩௩௯. ளெண்காற்புள் ளானோர்க் கிருகாற்பு ளெவ்வெவையுங்
கண்காணுந் தூதாங் கடனிலவே - யொண்காணத்

௩௪௦. தூண்டி னதன்செலவு சூழ்ந்துவரப் பாணித்தல்
வேண்டுமெத னாற்பிழையே மேவுமே - யூண்டிகரும்

ருசக. காருவரி சொல்லோ கடுங்குரல் வாய்திறப்பி
ஞரழலே சிந்து மவையன்றிச் - சீரரையன்

ருசஉ. வாகனமா யன்னான் வழியேவ லாற்றுவது
வேக வளியெதிரின் மீள்வதே - போகவந்து

ருசரு. செந்தமிழைச் செம்பொன்னைச் சேர்ப்பினவை தாஞ்செல்லா
பந்த முறக்கொடுபோம் பாலவே - முந்துய்த்தும்

ருசச. வேற்றொருவர் வாய்திறக்க வேண்டுமே யென்செய்கை
வேற்றொருவர் காணு விதியதே - கோற்றொடிக்கைப்

ருசரு. பாஙகிமுத லோரைப் படர்விக்கப் பல்வழியு
மீங்கெனக்குச் சற்று மிசைவின்றே - யீங்குரைத்த

ருசசா. பல்வகைய தூதும் பதனறிந்து செய்கின்று
சொல்வகையி னன்றித் துணிபொருளே - நல்குவகை

ருசஎ. காட்டுவன வல்லவே கண்ணிய பூங்கடுக்கைத்
தோட்டலர்த் தாரிற் றுனைந்தேறி - வேட்டதிது

ருசஅ. நல்கெனமுன் னத்தி னவின்றருளி நாதனோர்
செல்கென மீள்வதுநின் செய்கையே - புல்குதவ

ருசகூ. மாற்றி மறையு மரவு மதியுமற்று
மேற்ற மிகுமணியா யெய்ந்திருக்கு - நீற்றர்

ருரு0. திருவுருவின் மீது திகழ்தெய்வத் தாரின்
மருவுதவ நீவளரா யேனு - மொருவிலுயி

ருருக. ராக்கைபொருண் மூன்று மளிக்கவென நேர்ந்தேற்கு
நீக்க மறுந்துணையாய் நேர்வதே - போக்கி

ருருஉ. லரிய தவமா மகத்திடு முற்றும்
பிரணவ மாகப் பிறங்கி - விரவுமண

ருருரு. மெண்டிசையும் போர்ப்ப விறைவரே போலுயர்வு
கொண்டநறுங் கொன்றைக் கொழுந்தாரிற் - றண்டுளித்தேன்

௱௫௪. வாய்மடுத்துத் தேக்கெறிந்து மன்னுகளி மிக்குளர்ந்து
தாய்மறிந்து தாதளவித் தங்குநலம் - வேய்மதித்த

௱௫௫. தோளியொரு பாலாபாற் றன்னுமங்கே யும்பெறுவை
மீளி புரியினிங்கு மேவுவை - கேளளியே

௱௫௬. தூதுவிடு வார்க டணிந்தபொரு ளேயிசையுந்
தூதுபுரி வார்க்குமெனிற் சொல்லுவதே - னீதகலிற்

௱௫௭. றேற்றுதலா னின்குலத்தைத் தூய்மைபடுத் தாயதுவு
நோற்றதே நீயதன்பா னோக்குதலி - னேற்றுருவாய்

௱௫௮. மாயனணி தாங்கும் வரத னுருக்காணத்
தூயதிரு மேனி தொடநிகரின் - றூய

௱௫௯. வருள்பெரிதுந் தாங்கநின்போ லார்பெற்றார் பெற்றா
மருள்சிறிதுந் தாங்கவா ராரே - தெருளளியே

௱௬0. முன்னின்ப நின்னின்ப முற்றிய வெண்ணின்பம
பின்னின்ப மன்றிப் பிறிதுண்டே - யன்னைநீ

௱௬௧. யாதற் குரிமை யடுத்தலா னிற்றூது
போதற்க ணுக்கப் புகன்றனேன் - போதுற்றி

௱௬௨ வேட்ட வொழுதி னதுவாயே மேவினு
மீட்டமிதன் மேலு மெனக்குண்டோ - பாட்டளியே

௱௬௩. தன்பெருமை தானறியாத் தன்மையன்போல் வையசத்து
நின்பெருமை நீயு நினைகலாய் - முன்பொருநா

௱௬௪. ணின்னுருவங் கோடலா னன்றே நெடுவேலான்
முன்னிய வேத முழுதுணர்ந்தா - னின்ன

௱௬௫. தரியென்னு நாம மணிதலான் மாய
னிரவி வலாரியிவர் முன்னோர் - பரசுகரத்

௱௬௬. தானந்த ருத்திரனுக் காளாய்ப் பணிபுரிந்து
வானந் தரிக்கும் வரம்பெற்றார் - மான

௬௬௭. மடங்கலும் பார்ப்பதிக்கு வாகனமா யையற்
இடங்கொளணைக் காலா யியைந்தே - தொடங்கரிய

௬௬௮. வெண்ணின்மிரு கக்குலமு மேத்து மரசுரிமை
மண்ணில் விரவி வயங்கிற்றே - கண்ணுதிறல்

௬௬௯. வாசுகி யாதியுநம் மன்ன னடிபோற்றி
யாசையுல கமபரித்தின் பார்ந்தனவே - பேசியநின்

௬௭௦. மந்தியெனு நாம மரீஇயன்றே நீமருவுங்
கொந்தவிழ்கா வ்ானரங்கள் கொண்டவே - யுந்துபெயாச்

௬௭௧. சாகஞ் சிலீமுகமுஞ் சார்ந்தன்றே விற்கணையும்
வேகம் பகைக்கழித்து வீறுவதும் - நீகொ

௬௭௨. ளளியென்னு நாம மணிந்த கருணை
களியெவர்க்கு மாற்றுவது காண்டி - யொளிர்தருநின்

௬௭௩. வண்டென்னு நாம மணிந்த வளைமகளிர்
தண்டளிர்க்கைச் சீரளிக்குந் தன்மைத்தே - வண்டேநின்

௬௭௪. ஞமமே யண்மினர்க்கு நன்மை தருமென்று
ஞமிநீ நல்கல் வியப்பேயோ - காமருநி

௬௭௫. னெங்கும் வழங்கு மியற்பெயர்த்தெங் கையணியு
நுங்குலமெங் கூந்த னுழைந்துளரு - மெங்கெவர்க்குங்

௬௭௬. கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யெங்கண்ணின்
வண்ண நினக்குரிய வண்ணமே - கண்ணலமங்

௬௭௭. தாடு தொழிலு நினதேயங் கோடரியுங்
கூடியநின் ஞமமெனக் கூறுவதே - பாடகத்தா

௬௭௮. ளெய்திய நூபுரங்க ளேங்க வவற்றுள்ளே
பெய்தது மந்தப் பெயருடைத்தே - யைதுலகின்

௬௭௯. மிக்குரிமை யிவ்வாறு வீறினேன் மிக்குணர்ந்த
தக்கவருஞ் சாற்றத் தகுமிஃதத் - தக்கவெனை

௩௮௦. வில்லிற் குணமாய் விசித்தேற்றி நுங்குலத்தை
வெல்லத் தொடுத்து மெலிவிக்கும் - வல்லமத

௩௮௧. மார னுடற்ற வருந்தி யருங்கவலை
சாரவது நீபார்க்கத் தக்கதோ - வாரமென்ப

௩௮௨. தல்ல லடையி னலர்விழிக்கு வாரிமைபோன்
மெல்லுடைக்குக் கைபோல் விலாவதன்றே - நல்லளியே

௩௮௩. நின்னியற்பேர் கொண்ட நிலைவளைக ளென்கையி
னின்னையன்றி யாரே நிறுத்துவா - ரன்றேநின்

௩௮௪. றன்னுருவம் போலுந் தடங்கண் பொழிபுனனின்
றன்னையன்றி யாவர் தவிர்த்திடுவார் - மின்னனையா

௩௮௫. மேனி திதலை விளைவுவெனப் பூத்தகணி
கானிவர் சண்பகமுங் காலுழக்கா - யானை

௩௮௬. வுரியைநீ யல்லாலெ னுள்ளிய மேனி
நெரிதிதலை யாரே நிறுப்பார் - விரிநீழன்

௩௮௭. மாவிற் பலாசில் வளர்கூ விளத்தினறும்
பூவின் மதுவுண்ணப் புக்குலாய் - மேவுதொறுந

௩௮௮. தன்னை வலம்புரிந்த தென்று தவமாக்கு
மன்னனைநீ யன்ம மகிழ்வாயே - துன்னி

௩௮௯. யிரப்ப தரிதா லிரப்பி னிரந்த
சுரப்பதின்மேற் றொல்லுலகிற் சீர்த்தி - நிரப்பதில்லை

௩௯௦. யத்தகு சீர்த்தி யளிக்கவான் மேவாமை
பைத்த பெரும்பார் பசருமே - யெத்திறத்தும்

௩௯௧. வண்டங்கே செல்லின் மதுமலர்த்தார் மன்னவனூர்
வண்டிங்கே நல்க மகிழ்பவரே - மண்டி

௩௯௨. முருகா ரளியுங்கே முன்னினாற் செம்மல்
பெருகா ரளிபெறுவ துண்டே - மருவுமொழி

௱௯௩. வாளரி யங்கே மருவின் வெதும்பிவிழு
நீளரிக் கண்ணீர் நிகழாதே - கோளின்

௱௯௪. மதுகர மங்கே வழங்கினுயிர் வேவ
விதுகரம் வெப்புவிளை யாதே - கதுவனுறச்

௱௯௫. சஞ்சரிக மங்கே தலைப்பட்டா லென்கரங்க
ளஞ்சரி கங்கணங்க ளாருமே - விஞ்சலுறுஞ்

௱௯௬. சஞ்சா யகமங்குச் சார்ந்தாற் றிறன்மாரன்
வெஞ்சா யகமிங்கு மேவாதே - யஞ்சாச்

௱௯௭. சுரும்படரி னங்கே சுரும்பிவர்வார் வில்லின்
பெரும்படரி னங்கம்பீ ருதே - விரும்பி

௱௯௮. யொருமந்தி யங்கே யுறினழலிற் சீறி
வருமந்தி மாருதம்வாட் டாதே - பொருவில்

௱௯௯. பிரமரங்க ளல்கிப் பெயரினு னந்தப்
பரமரங்க ளல்குபய னுண்டே - கரிசில்

௨௦௦. வரிஞிமிறு செல்லின் மணிமுலைக்குச் சாந்திங்
குரிஞிமிறு கத்துற்ற தாமே - யுரிய

௨௦௧. வறுகாற் பறவை யடைப்பினிரண் டென்னப்
பெறுகாற் பறவைபிழை யாவென் - றறுகாதன்

௨௦௨. மல்க விரந்தேன் வறங்கூரா மேசேற
னல்குகட் னென்று நயப்பாயே - நல்கி

௨௦௩. யிலளிதைக்கு மூவரியு மீனவர மீந்தார்
பலருட்லும் புக்கமரும் பண்ட - னுலையப்

௨௦௪. புரியமர்மிக் காற்றிப் புகல்காம நல்க
திரிபுர சுந்தரிக்குச் செய்தார் - வண்மாதின்

௨௦௫. பூங்கரத்துக் காப்புக் கடகம் புணர்த்தினு
ராங்கவள்வீழ்ந் தேதழுவ வாக்கினர் - பாங்கவடான்

௪0௬. மஞ்சனீ ராடவுனு வார்ந்தொழுக வக்கரையின்
மஞ்சணீர்க் கூத்தரென வைகினார் - வஞ்சியவ
௪0௭. னீக்கிய கோசமெனு நின்றகன்னி தன்னையுமில்
லாக்கிநகர்க் காவ லருளினார் - மாக்கருங்கண்
௪0௮. மங்கை வேட்ட வரமளித்தார் காளிக்குப்
பொங்குகட ளுக்கும் பொலிவளித்தார் - மங்கைசிறை
௪0௯. மீள விராமற்கு வீரமளித் தாரனங்கா
யாள விரேணுகைக்கண் பார்க்கினார் - நீளுஞ்
௪௧0. சிறைகருடன் றாய்க்கொழிப்பச் செய்தார்சா பத்தின்
மிறைதிருமா லுக்குமையால் வீத்தார் - மறையவனோ
௪௧௧. டேடிய வாணி யுறவாக்கி னார்பெண்மை
கூடிய மாலைக் குறித்தணைந்தார் - நாடிய
௪௧௨. மாண்டுகென்னு மாமுனியால் வானை யரம்பையர்கட்
கீண்டிய போக மியைவித்தார் - நீண்டவருள்
௪௧௩. கண்டே றுனையார்க்கே கைகொடுப்பா ரன்னவர்பாற்
பெண்டேது செல்லவெவர் பெட்கலார் - வண்டே
௪௧௪. மிஞிறே யளியே விளரியரி யேநின்
மிஞிறுஞ்சிமி றுக விளங்க - விமிழ்கின்ற
௪௧௫. வைசாகி வைகாசி வாய்ந்த பறையலகே
யைதாம் பலகறையென் றுனவே - மைதிரு
௪௧௬. நீர்க்கீழ் நகர்ப்புறங்கீழ் நீரே பிறநகரே
சேர்க்குமின்முன் முன்றிலெனச் சேர்ந்தவே - பார்க்க
௪௧௭. னிருந்தா னிருந்தானே பார்க்க னெழுந்து
திரிந்தான் றிரிந்தா னெழுந்தென் - றிருந்தனவே
௪௧௮. தத்தந் திணைக்குரிமை சாற்றுகரு வும்பொழுது
மொத்து முறழ்ந்து முறுவனவே - வைத்தபொருள்

௪௧௯. வெண்பா முதனான்கும் வேதியர்முன் னோர்நால்வ
ரொண்பாவென் றோத லுறழ்ந்தனவே - யொண்பாத்

௪௨௦. தளைமுதலுந் தம்மு ளுறழ்ந்தனவே காவி
யொளிர்மதியொண் காம விதியே - வளருந்

௪௨௧. துடிகனியே தோமி றுகடினியே யான
படியேநீ யெத்தொழிலைப் பார்த்துப் - பிடிசெயினு

௪௨௨. மண்ண லருளு மதுவே நெறியாக
நண்ணுமது போனலக்கு மாயினு - மண்ணவர்க்குக்

௪௨௩. கீழாக வைத்த கிளர்தொழில்சற் றும்புரியாய்
வீழாக மேற்றொழிலு மேவாயே - வாழாகப்

௪௨௪. பூவிலிருந் தூது முறைபுரித லேயன்றி
மேவு மரசுரிமை மேவாயே - தாவிலாச்

௪௨௫. சந்திசைவ தல்லாற் றகுபயனுண் டாமேனுங்
கொந்துபடு மத்தியிவர் கோளிலா - யெந்திடத்தும்

௪௨௬. வாசந்தி யென்பாரை யன்றிநீ போதியென்பார
பேசுந் திருவேதும் பேணிலா - யாசில்

௪௨௭. கரவீரங் கொண்டு கதழ்வாய்மற் றுங்கே
விரவாக் கணியோர்ந்து மேவாய் - பரவாம்ப

௪௨௮. லம்போ ருகத்தா ரமர்வா யுயர்வேனும்
வம்போடு கோளி மருவுகிலாய் - நம்புங்

௪௨௯. குவலயநீ வேண்டிந் குறிக்குமுனந் தாட்கீ
ழுவலமற வாவதே யன்றே - கவலையற

௪௩௦. நாகம் புகுவாயந் நாகந் துறந்துரிய
சோகம் படர்வாய் துறையனைத்து - நீகண்டு

௪௩௧. நீத்தவே யன்றோ நிகர்ப்பாரார் நின்னையினி
யாத்தனுக்கு நின்போ லடுத்தாரார் - மூத்தபெருந்

௪௩௨. தேவரு நின்னைச் சிரமேற்கொள் வாரென்னின்
யாவரே நின்னை யிகப்புறுவார் - போவதுசெய்

௪௩௩. தங்கங்கே பல்லெழிலு மங்கங்கே பல்லயமு
மங்கங் குமரர்கள்பூங் கோயிலு - மங்கங்கே

௪௩௪. விம்மிதப் போதுகளு மெய்த்தருவு முள்ளவற்று
ளிம்மெனுங் காலமுஞ்சென் றெய்தாமைக் - கொம்மெனப்

௪௩௫. தூதிதுவா லென்றுரிமை சூழ்ந்தவிட மாதுமுடி [போய்த்
மாது மறியாமரபெய்திச் - சோதிதிக

௪௩௬. ழானந்த ருத்திரனு ரஞ்செழுத்து நெஞ்சாக்கி
யூனந் தபும்பணிவு முள்ளாக்கிக் - கானந்

௪௩௭. தழைத்தமலர்க் கொன்றைத் தனித்தா ரிவர்ந்து
மழைத்தமது வுண்டு மகிழ்ந்து - செழித்ததற்பின்

௪௩௮. காந்தாரம் பாடு கனலிற் றழல்கின்ற
காந்தாரங் கொங்கை கலப்பிப்பார் - சேந்திடநாச்

௪௩௯. சாதாரி யோது தமியே னிறையோடுஞ்
சாதாரி யின்னே தவிர்த்தருள்வார் - மீதான

௪௪0. தாண்டகம் பாடு தமியேனை விட்டங்கே
தாண்டகங் கொண்டு தரவருவா - ரீண்டு

௪௪௧. மிராகங்கண் முற்று மியம்பிங் கிருவே
மிராகங்க ளொற்றித் திணைவார் - பராவுங்

௪௪௨. கவுசிகம் பாடு கடிதடமே னில்லாக்
கவுசிக நீற்றும்வகை காண்பா - ரிவறுசுவை

௪௪௩. யார்நட்ட பாடை யறைதி யெனக்கிங்காம்
வார்நட்ட பாடை மருவியார் - பார்நட்ட

௪௪௪. சீகா மரம்பாடு தேம்பு மெனையிணர்த்த
சீகா மரம்புனையச் செய்தருள்வார் - பாகாச்

௪௪௫. செண்டி தனைப் பாடு தெரிவருமா னந்தச்
செண்டிதமை வேட்டதெனத் தேர்வார் - புகன்றவிசைக்

௪௪௬. காம்போதி பாடுநெடுங் காம்போதி வில்லினார்
காம்போதிக் கென்னைக் கவல்வியார் - தேம்பாமை

௪௪௭. நைவளம் பாடு நனிதேவ நாயகரென்
னைவளம் பார்த்து நலந்தருவார் - நைவில்

௪௪௮. புறநீர்மை பாடு புகழ்தருமே கம்பா
புறநீர்மை யென்பாற் புகுத்தார் - செறிநீர்மைப்

௪௪௯. பஞ்சுரம் பாடு படர்கூர்ந்த வென்னுடற்குப்
பஞ்சுர மென்னும் பரிசுணர்வா - ரெஞ்சலின்றிச்

௪௫௦. செவ்வழி பாடு செறிந்திருக்கை யாங்குணர்ந்து
செவ்வழியே யாக்குந் திறநினைவா - ரெவ்வழியுங்

௪௫௧. கொல்லி முழுதுங் குறித்தோ திதுவுமுயிர்
கொல்லியவட் கென்னக் குறிக்கொள்வார் - மெல்ல

௪௫௨. விளரியெடுத் தோது விரவிரக்க மிக்கு
விளரியவென் மேனிவிழி யுய்ப்பார் - வளருமிசை

௪௫௩. நேர்திறம் பாடொழியா நீரினளென் றேயருட்க
ணேர்திற மல்லா நிலையருளார் - சீர்திகழப்

௪௫௪. பாலை முழுதும் பயிறந் தவறுணர்ந்து
பாலை யுரிப்பொருளைப் பாற்றுவார் - சாலக்

௪௫௫. குறிஞ்சி யனைத்துங் குழைந்துபல்கா லோது
குறிஞ்சி யுரிப்பொருளுட் கொள்வா - ருறுஞ்சுரும்பே

௪௫௬. யெல்லா முறைத்தாங் கிசையெழுப்பிப் பாடுவல்யா
னல்லா யவர்செழுந்தார் நல்குவார் - வல்லையான்

௪௫௭. போய்வரினு மவ்வளவும் போற்றரிது நீயுயிரை
மாய்வதிடை போலும் வதிந்தாலு - மாய்மலர்த்தார்

௪௫௮. தந்தளிப்ப தண்மித் தழும்ளவு மாற்றுதற்கே
யந்தநலந் தாரி னமையாதே - யெந்தவழி

௪௫௯. மாதர் பிரியாமை வாழுமா னந்தேசர்
போதுவரென் றையுறவு பூணுதியே - லோதுவல்கே

௪௬0. ளீங்கிடையே யாவி யிறந்தாலு மாவடியி
லோங்கிய வைந்தொழில்செ யுத்தமனார் - பாங்குபெறத்

௪௬௧. தந்தாள் குறித்துத் தவிர்ந்தேற் குடலியக்கந்
தந்தாண் முறையவர்க்குச் சத்தியமே - யந்தோமுன்

௪௬௨. மாயன்முத லோருடலை மாய்த்தெதிர்ந்த பண்டனுயிர்
சாய வழித்துத் தகமுன்போற் - காயங்

௪௬௩. கொடுத்தருளுங் கச்சி மயானத்தெங் கூத்த
ரடுத்த வினையுடலீ தாகி - விடுத்திடினு

௪௬௪. மாக்கை யிதுபோ லளித்துப் பெருங்கருணை
வீக்க லவர்க்கு விளையாட்டே - போக்கி

௪௬௫. லமிர்தசஞ் சீவி யயிர்வெள்ளிக் கீந்து
துமியுடற நீசியெனுந் தொல்லோற் - கிமிழ்கொளீஇ

௪௬௬. வச்சிர யாக்கை வழங்குமிட்ட சித்தீசர்
மெச்சவுயிர் நல்கல் வியப்பேயோ - வச்சோ

௪௬௭. விறவாத்தா னத்தி லிருந்தருளா னந்த
ரிறவாமை நல்கலெளி தன்றோ - குறிமாவே

௪௬௮. பெண்ணுருவ நீங்காப் பெருந்தலைகமை யானந்த
வண்ண லியற்கை யறியாய்நீ - யெண்ணி

௪௬௯. னிறைந்தநெய்போ லெங்கு நிறைந்துலக மெல்லா
மறிந்துலக மேதுமறி யாதான் - செறிந்துயிர்க்கு

௪௭0. வெவ்வே றுடலம் விளைத்துத் திருமேனி
வெவ்வே றெடுக்கும் விரகினு - னெவ்வேறு

௪௭௧. மாவானொவ் வோருருவே யாங்காங் குறக்காட்டி
மேவா மலத்தை விளித்திடுவா - னோவாது

௪௭௨. வல்லி யொருபான் மகிழ்ந்திருக்க வேயன்றே
மெல்லியன்மான் மாதுநல மேவினா - னல்லவெழிற்

௪௭௩. றாரு வனத்துத் தருமடவார் தானையெலாம்
பாருக் களித்துப் படர்ந்திட்டா - னார

௪௭௪. வரவுமதி நீங்கா தமர்வனகா ணாமை
யிருமடவார்க் கின்பமிலையக் கின்றா - னொருமதுரை

௪௭௫. யங்கயற் கண்ணி யறியாமை மாதர்பலர்
செங்கைவளை யேற்றிறை சிந்தினா - னங்கங்கே

௪௭௬. மின்னனையார்க் கையன் விளைத்த திருக்கருணை
யின்னும் பலவா லெனக்கின்னே - தன்னறுந்தார்

௪௭௭. தந்தருளி நீயிங்கே சாருமுன்னே தான்வரினும்
வந்திடுவென் செய்கை மதிப்பாரா - ரந்தி

௪௭௮. விருந்தருள்வா னாயிடினு மெம்பெருமா னுக்குத்
திருந்துதிரு மேனியெங்கு மன்றோ - விரிந்தவுல

௪௭௯. கெங்குந் திருவடிக ளெங்குந் திருக்கரங்க
ளெங்குங் கருணை யெழுமுகங்க - ளெங்கு

௪௮௦. மலர்ந்த விழிகளெங்கும் வார்செவிக ளெங்கு
மலர்ந்தவரக் காம்பலன வாய்க - ளிலங்கு

௪௮௧. மணிநாசி யெங்குமாய் மன்னி யிருப்பன்
பிணியா வருக்கும் பெயர்ப்பான் - பிணியேது

௪௮௨. மில்லா னுறாதே யுறுவா னிறைஞ்சுநர்பாற்
செல்லாமே செல்வான் செறிவரங்க - ளெல்லாங்

௪௮௩. கொடாதே யெவர்க்குங் கொடுப்பா னுருவ
மடாமே விழிக்கண் மடுப்பான் - விடாதுளைகள்

௪௮௪. கேளாமே கேட்பான் கிளவாமே தான்கிளப்பான்
மூளாதி மோவாமே மோக்கிற்பான் - வாளாங்

௪௮௫. குழல்வார் தமையு முறப்பிணிப்பான் விட்டுக்
கழல்வாரை யுங்கழல வொட்டான் - றெழிலனைத்துஞ்

௪௮௬. செய்யாமே செய்குவான் செய்தொழிற்குத் தக்கபய
னையா ருயிர்நுகர நாட்டுவா - னெய்யாமை

௪௮௭. யாருயிர்கள் பேரின்ப வாழி படிநெறியிற்
சாரும் விரகன்றித் தானினையா - ஞேருந்

௪௮௮. தனைநோக்கு மாருயிரைத் தாஞேக்கி மூல
மனைநோக் கறத்தன்பால் வைப்பான் - வினைசாம்ப

௪௮௯. வெவ்வளவு தன்பா லிசையக் கருதுவா
ரவ்வளவுந் தம்பா லிசைந்தணைவா - னெவ்வெவர்தங்

௪௯0. கண்ணுக்குங் காணுன் கருத்துக்குஞ் சேய்மையான்
வண்ண வுரைக்கும் வளவாதான் - றிண்ணிய

௪௯௧. வாண னறைகூவ வாகுபல வுந்துணித்தா
ஞேணன் பொரக்கருணை யூக்கினுன் - பூணுஞ்

௪௯௨. சலந்தரனைத் தேய்த்தான் சமர்த்த விராமற்
கலங்கு பரசொன் றளித்தா - னிலங்குமையோ

௪௯௩. டொற்றிப்ப வைம்பூ வுறுத்தானை நீற்றினுன்
பொற்றவருள் கல்லெறிக்குப் பூண்பித்தான் - முற்றிழையாள்

௪௯௪. வாட்கண் புதைப்ப மருங்கொழித்தான் மெய்குழையத்
தோட்கொண் டணையநலஞ் சூழ்ந்தணைந்தான் - ருட்பணிய

௪௯௫. வேவிய செவ்வேட் கினிததுசெய் தானவன்ற
னேவலொழி யக்கழுவா யேலென்ருன் - பூவினுக்கு

௪௯௬. மாயனொரு கண்ணளிப்ப வாங்கினுன் வன்றெண்டற்
கேயவொளிக் கண்ணேன் றினிதளித்தான் - றூய

மலையடிகள் நூல்
MARAIMALAI ADIGAL

வண்டுவிடுதூது.

௪௯௭. மறைக்கோ வணத்தான் மறைச்சிலம்பான் மாவான்
மறைக்கோ வறிவரிய மாண்பா - னெறிக்கோ

௪௯௮. ளுயிருக் குயிரா னுயிரறிவுக் கெட்டான்
பயிலுயிர்க்கே யின்பருளும் பண்பான் - பயிலுநர்க்குக்

௪௯௯. கண்ணுமா னந்தங் கனிவாயு மானந்தம்
வண்ண வதனமு மானந்தந் - தண்ணறல்சேர்

௫00. வேணியுமா னந்தம் வியன்மார்பு மானந்தம்
பூணுமா னந்தம் புயங்கரந்தா - ளுணுடையு

௫0௧. மானந்த மானந்த மானந்த மானந்த
மானந்த மெவ்வுறுப்பு மானந்த - மானந்தன்

௫0௨. காஞ்சியுமா னந்தமாய்க் காணநிற்பா னத்தகைய
வாஞ்சையுறு மானந்த வள்ளறன் - காஞ்சனத்த

௫0௩. கோயிலை முற்றிக் குறுகி முறைமையா
னீயணவி யான்சொ னெறியுளிநின் - றுயிடையே

௫0௪. பூங்கொன்றை வாங்கியிங்குப் பொற்பக் கொணர்ந்தென்று
மோங்குபெரு வாழ்க்கை யுதவு.

கச்சி ஆனந்தருத்திரேசர்
வண்டுவிடுதூது
முற்றிற்று.

உ

கணபதி துணை.

# திருவாரூர் நான்மணிமாலை.

திருக்கைலாசபரம்பரைத்
தருமபுரவாதீனத்தைச்சார்ந்த
காசிமடம்

## குமரகுருபரசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது
திருக்கைலாசபரம்பரைப்
பொம்மையபாளையம்
சிவஞானபாலையசுவாமிகளாதீனத்து
அடியார்குழாத்துளொருவராகிய
சிதம்பரம்

**இராமலிங்கசுவாமிகளால்**

பார்வையிடப்பட்டு
காணியம்பாக்கம்
பொன்னையாமுதலியார்குமாரர்

**முருகேசமுதலியாரால்**

சென்னை
ஆதிகலாநிதியச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

சித்திரபாநு௵ கார்த்திகை௴.

கணபதிதுணை.

# திருவாரூர் நான்மணிமாலை.

காப்பு.

நாடுங் கமலேசர் நான்மணிமா லைக்குமிகப்
பாடுங் கவிதைநலம் பாலிக்கும் - வீடொன்ற
முப்போ தகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்குங்
கைப்போ தகத்தின் கழல்.

நேரிசைவெண்பா.

நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே - யாரூர
வீதிவிடங் காவடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடங் காகடைக்கண் பார்த்து. (க)

கட்டளைக்கலித்துறை.

பார்பெற்ற வல்லிக்கும் பாகீ ரதிக்குமெய்ப் பாதியுமத், தார்பெற்ற வேணியுந் தந்தார் தியாகர் தடம்புயத்தின், சீர்பெற்றி லேமென்று நாணல் வணங்கிச் சிலையெனவும், பேர்பெற்ற தாற்பொன் மலைகுனித் தாரெம் பிரானென்பரோ. (உ)

ஆசிரியவிருத்தம்.

என்பாக நகுதலையோ டெழிலாக வணிந்தகமலேச மற்றுன், றன்பாக மிடப்பாகத் தலைவிகரு விழிதோய்ந்துந் தவ்வி பாகத், தன்பாக நின்திருநோக்

கவைதோய்ந்துந் திருநிறம்வே றுகை யாலப், பொ
ன்பாக மிதுவெனவு நின்பாக மிதுவெனவும் புக
லொ ணாதே. (௩)

நேரிசையாசிரியப்பா.

ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பிற்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதவத் தொதுங்கிய
விருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலு முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிராற்
றெடுத்தபொற் சுளைபல வெடுத்துவாய் மடுப்பது
மானுட மடங்க றாணிடைத் தோன்றி
யாடகப் பெயரி னவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரி னிணங்கவர்ந் துண்டென
விறும்பூது பயக்கு நறும்பணை மருதத்
தந்த ணாரூ ரெந்தையெம் பெரும
சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்
கிடம்வலம் பொலிந்த விறைவியு நீயு
நடுவண் வைகு நாகிளங் குழவியை
யொருவிரி னொருவி ருள்ளநெக் குருக
விருவிருந் தனித்தனி யேந்தினிர் தழீஇ
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி
யுச்சி மோந்துமப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேறலோ டொழுகு
மெழுதாக் கிளவியி னேழிசை பழுத்த

விழுமென் குரல மழலைத் தீஞ்சொற்
சுவையமு துண்ணுஞ் செவிகளுக் கையவென்
பொருளில் புன்மொழி போக்கி
யருள்பெற வமைந்ததோ ரற்புத முடைத்தே. (௪)

நேரிசைவெண்பா.

தேங்குபுக ழாரூர்த் தியாகர்க்கெண் டிக்குமொளி
வீங்கு பகற்போது வெண்படமாந் - தூங்கிருள்சூழ்
கங்குற் பொழுது கரும்படமாஞ் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது. (௫)

கட்டளைக்கலித்துறை.

போதொன் றியதண் பொழிற்கம லேசர்பொன் மார்பிலெந்தாய், சூதொன்று கொங்கைச் சுவடென் ப ராற்றொல் களிற்றுரிவை, மீதொன் றுவகண்டு வெங்கோப மாமுகன் வெண்மருப்பா, லீதொன் றடுகளி றென்றெதிர் பாய்ந்த வினைச்சுவடே. (௬)

ஆசிரியவிருத்தம்.

இணங்குகம லாலயமா லிதயத்திற் பொலிந்ததியா கேச ரம்பொற், கணங்குழைமண் மகளிதய கமலத்தும் பொலிதலினக் கமல மான, மணங்கமழ்பங் கயத்தடஞ்சூழ் கமலைகம லாலயப்பேர் வாய்த்த தான்மற், றணங்கனையா ரிதயமுந்தம் மருட்கொழுந ரிதயமுமொன் றுகுந் தானே. (௭)

நேரிசையாசிரியப்பா.

தானமால் களிறு மாநிதிக் குவையு
மேனைய பிறவு மீகுந ரீக
நலம்பா டின்றி நாண்டுறந் தொரீஇ

யிலம்பா டின்றி யேற்குந ரேற்க
புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலு
மிருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே
அதாஅன்று
ஒருகா லத்தி லுருவமற் றொன்றே
யிடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பா லிரத்தன் மாநிலத் தின்றே
விண்டொட நிவந்த வியன்றுகிற் கொடிகண்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரொத்துணைக் கொடுமை செய்யினு
மடியார் செய்திடு முதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே. (அ)

நேரிசைவெண்பா.

பெருமான் றமிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானுங்
கருமா னுரியதளுங் கச்சு - மொருமானுஞ்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கா
லங்கத் தடங்கா தவா. (கூ)

கட்டளைக்கலித்துறை.

வாவியம் போருகஞ் சூழ்கமலேசர்புள் வாய்கிழித்த
தூவியம் போருகந் தோறுநின் றோர்துணைத் தாள
டைந்த, வாவியம் போருகந் தாயிரங் கூற்றுடன்
றூலுமஞ்சே, ஞவியம் போருக நன்னெஞ்ச மேய
வர் நாமங்களே. (க0)

## ஆசிரியவிருத்தம்.

நாம வேற்படைக் கடவுளைப் பயந்தரு ணங்கைதெ ன் கமலேசர், வாம பாகத்தைக் கொளவலப் பாகநீர் மங்கைகொண் டனள்போலாந், தாம நீற்றொளி த ன்னிறங் காட்டவெண் டலைநிரை நுரைகாட்டக், காமர் பூங்கொடி மடந்தையர் மதர்விழிக் கயலுலா வரலாலே. (கக)

## நேரிசையாசிரியப்பா.

வருமுலை சுமந்து வாங்கிய நுசுப்பிற்
புரிகுழன் மடந்தையர் பொன்னெடு மாடத்
தொண்கதிர் வயிரமுந் தண்கதிர் நீலமுஞ்
சேயொளி பரப்புஞ் செம்மணிக் குழாமு
மாயிரு டிரந்து மழகதி ரொழிப்பன
சுரநதி முதல வரநதி மூன்றுந்
திருவநீண் மறுகிற் செல்வது கடுப்ப
வொள்ளொளி ததும்பு மொண்டமிழ்க் கமலைத்
தெள்ளமு திறைக்குந் திங்களங் கண்ணித்
தீநிறக் கடவுணின் கான்முறை வணங்குதுங்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழி லுளைய
னூற்றமில் யாக்கை யுவர்நீர்க் கேணிப்
புலைத்தலை யுயிர்மீ னலைத்தனன் பிடிப்ப
வைவளி பித்தென வமைத்துவைத் திருந்த
முத்தலைத் தூண்டி றூண்டியத் தலைவாழ்
நாண மிதப்பு நோக்கித் தாழா
தயிறலைத் தொடங்கி யெயிறலைத் திருத்தலிற்
றள்ளா முயற்சி தவறுபட் டொழிந்தென
வெள்குறீஇ மற்றவன் விம்மித ஞக
வருட்பெருங் கடலினவ் வாருயிர் மீனங்

கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப்பரும்
பரமா னந்தத் திரையொடு மூலாவி
யெய்தரும் பெருமித மெய்த
வையமின் கடைக்க ணருளுதி யெனவே. (கஉ)

நேரிசைவெண்பா.

என்பணிந்த தென்கமலை யீசனார் பூங்கோயின்
முன்பணிந்த தெய்வ முனிவோர்க - ளன்பென்னும்
புண்சுமந்தோ நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரொன்றுருகு வர். (கா)

கட்டளைக்கலித்துறை.

வரந்தந் தருள வரதம்வைத் தாலென் வரதமிடக்
கரந்தந்த தாலிவர் கையதன் றேபலி காதலித்துச்
சிரந்தந்த செங்கை கமலேசர் நாமந் தியாகவொன்ப
தரந்தந்த வாள்விழி யாடந்த தாங்கொ லறம்வளர்த்தே.

ஆசிரிய விருத்தம்.

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர்தலை மாலைசி
ர மாலை யாகக், கொள்ளுவது மலர்மடந்தை கொ
ழுநர்தலை கிண்கிணியாக் கோத்துச் சாத்த, வுள்ளு
வது மொழிவதுமற் றெழியாயே லடிமுடிக ளுண
ர்ந்தே மென்றே, கள்ளமொழி வான்புகிற்றேன் க
மலேச வவர்க்கவையே கரியு மாமே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

கருந்தாது விடுத்த பெரும்பணை தாங்கும்
படர்மருப் பெருமை பைங்குவளை குதட்டி
மடிமடை திறந்து வழிந்தபா லருவி
களைபொரு தலைப்பப் பெருகுபூந் தடத்து

வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசிற்
பானீர் பிரித்துண் டுவெள் ளெகின
நூற்பெருங் கடலு ணுண்பொரு டெரித்து
நாற்பயன் கொள்ளு நாமகட் பொருவு
மென்பான் மருதத் தண்புனற் கமலைத்
தென்பான் மேருவிற் றிகழுங் கோயின்
மூவ ரகண்ட மூர்த்தியென் றேத்துந்
தேவ ரகண்ட தெய்வ நாயக
நின்னடித் தொழும்பி னிலைமையின் றேனுநின்
றன்னடித் தொழும்பர் சார்புபெற் றுய்தலிற்
சிறியவென் விழுமந் தீர்ப்பது கடனென
வறியா யல்லை யறிந்துவைத் திருந்துந்
தீரா வஞ்சத் தீப்பிறப் பலைப்பச்
சோரா நின்றவென் றுயரொழித் தருள்கிலை
புறக்கணித் திருந்தனை யன்றே குறித்திடிற்
கோள்வாய் முனிவர் சாபநீர்ப் பிறந்த
தீவாய் வல்வினைத் தீப்பயன் கொண்மா
ருடல்சுமந் துழலுமக் கடவுளர்க் கல்லதைப்
பிறவியின் றுயர்நினக் கறிவரி தாகலி
னருளா தொழிந்தனை போலுங்
கருணையிற் பொலிந்த கண்ணுத லோயே. (க௬)

நேரிசைவெண்பா.

கண்ணனார் பொய்ச்சூள் கடைப்பிடித்தோ தெ
ன்புலத்தா, ரண்ணலா ரஞ்சுவனொன் றஞ்சியோ -
விண்ணோர், விருந்தாடு மாரூரா மென்மலர்த்தா ணீ
க்கா, திருந்தாடு கின்றவா றென். (க௭)

## கட்டளைக்கலித்துறை.

என்னுயிர்க் கொக்கு மிளஞ்சேயொ டேழுல கீ
ன்றவன்னை, மன்னுயிர்க் கொக்குங் கமலைப் பிரான்
மணிக் கண்டங்கண்டு, மின்னுயிர்க் கும்புய லென்
றுமென் கொன்றைபைந் தாதுயிர்க்கப், பொன்னுயி
ர்க் கொண்கன் பொலன்றுகி லாமெங்கை பூந்துகிலே.

## ஆசிரியவிருத்தம்.

பூமாதி னிதயகம லத்து வைகும் பொலிவானு ம
ரியணைமேற் புணரி யீன்ற, மாமாது வழிபடவீற் றி
ருத்த லானு மறைமுதலு நடுமுதலு முடிவி னின்ற,
தாமாத றெளிவிப்பார் போலு நீலத் தரங்கநெடுங்
கடன்ஞால மொருங்கு வாய்த்த, கோமாது மனங்
குழையக் குழைந்த வாரூர்க் குழகனூர் கிண்கிணிக்
கா லழக னோ. (கக)

## நேரிசையாசிரியப்பா.

அழலவிர் சோதி முழுவெயி லெறிப்ப
விளநில வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ் பகுவாய்
வெள்ளைமுள் ளெயிற்றுப் பிள்ளைவா ளரவுந்
தெண்டிரை கொழிக்குந் தீம்புனற் கங்கைத்
தண்டுறை மருங்கிற் றனிவிளை யாட
வுடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவு
ளுறழ்வலித் தறுகட் டெறுசினக் கேழன்
முளையெயி றிலங்க முருகுகொப் பளித்துத்
தளையவி ழிதழித் தண்டார் மார்ப

திருவிழி யிரண்டினு மிருசுடர் வழங்கலி
னிரவுநன் பகலு மொருபுடை கிடந்தெனக்
கடங்கலுழ் கரடத் தடங்களிற் றுரிவையு
மடங்கலீ ருரியு முடன்கிடந் தலமர
விண்படர் நிவந்த திண்பு யாசல
நெட்டிலைக் கமுகி னெடுங்கயி றார்த்துக்
கட்டுபொன் னூசல் கன்னிய ராடவப்
பைங்குலைக் கமுகு பழுக்காய் சிந்த
வெண்கதிர் நித்திலம் வெடித்துகு தோற்றங்
கந்தரத் தழகு கவர்ந்தன விவையென
வந்தி லாங்கவ ரார்த்தன ரலைப்ப
வொண்மிட றுடைந்தாங் குதிரஞ் சிந்தக்
கண்முத் துகுத்துக் கலுழ்வது கடுக்குந்
தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலைப்
பொற்பதி புரக்கு மற்புதக் கூத்தநின்
சேவடிக் கொன்றிது செப்புவன் கேண்மதி
விலங்கினுண் டீக்கது விண்ணவர் தருவென
வொருங்குவைத் தெண்ணுவ தோர்வழக் கன்மையி
னொத்த சாதியி னுயர்புமற் றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரோ
யாருயிர்க் கமைத்த வோரெழு பிறப்பினுண்
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனை கடந்த கடவுளிற் பழிச்சுதுந்
தொன்மறைக் குலங்கண் முன்னிய தியாதெனப்
பன்முறை தெரிப்பினும் பயன்கொள வரிதாற்
றேவரி னொருவனென் றியாவரு மருளுற

நீயே நின்னிலை நிகழ்ாது மறைத்துக்
கூறிய தாகு மாகலிற்
றேறினர் மறையெனச் செப்பினர் நன்கே. (உ0)

நேரிசைவெண்பா.

நல்லார் தொழுங்கமலை நாதனே நாதனெனக்
கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு – வெல்லும்
விடையே விடையாக மெய்யுணரா ரையுற்
றிடையே மயங்குமிது வென். (உக)

கட்டளைக்கலித்துறை.

இதுவே பொருளென் றெவரொவர் கூறினு மேற்பதெது, வதுவே பொருளென் றறிந்துகொண் டேனப் பொருளெவர்க்கும், பொதுவேயென் றுலும் பொருந்துமெல் லார்க்கும் பொதுவினிற்கு, மதுவேய் மலர்ப்பொழி லாரூரி னும்வைகும் வைகலுமே. (உஉ)

ஆசிரியவிருத்தம்.

வைய முழுது முழுதுண்ண வல்லாற் களித்து நவநிதியுங், கையி லொருவற் களித்தெமக்கே கதிவீ டளித்தோர் கன்னிகைக்கு, மெய்யி லொருகூ றளித்தனரால் விமலர் கமலைத் தியாகரென்ப, தைய ரிவர்க்கே தகுமுகம னன்று புகழு மன்றுமே. (உங)

நேரிசையாசிரியப்பா.

ஆமையோ டணிந்து தலையோ டேந்திக்
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்

பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனு
மிந்திரா தியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்து முற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பரசப் பணிகுநர் பணிய
வரசுவீற் றிருப்பினு மிருக்கு முறைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தை நொடிப்போழ் தணைப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலருங்
காமமீ தூர வேமுற் றிரந்தவ
டாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமொடி
யோகுசெய் திருப்பினு மிருக்கு மீகெழு
தபனிய மாடத் தரமிய முற்றத்
தைந்கணைக் கிழவ னரசிய னடாத்தக்
கொங்கைமால் களிறுங் கொலைக்கண்வாட் படையுஞ்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியுந் தவக்குறும் பெறிந்து
றுணங்கிய நுசுப்பி னணங்கனார் குழுமிக்
கைவகுத் திருந்து கழங்கெறிந் தாட

மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமரல்
செம்முகத் தாமரைச் சிறையளிக் குலங்க
ளம்மென் காந்தளி னளிக்குல மார்த்தெழக்
கலந்துமன் றழீஇக் காமுற னிகர்க்கும்
பொலன்செய் வீதிப் பொன்மதிற் கமலை
யண்ணன் மாநகர்க் கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலி
னிற்பதின் னிலையெனு நியமமோ வின்றே. (௨௪)

நேரிசைவெண்பா.

இன்னீ ருலகத்துக் கின்னுயிர்யா மென்றுணர்த்து
நன்னீர் வயற்கமலை நாதனார் - பொன்னார்ந்த
சேவடிக்கா ளானார் சிலரன்றே தென்புலத்தார்
கோவடிக்கா ளாகார் குலைந்து. (௨௫)

கட்டளைக்கலித்துறை.

குலைவைத்த செவ்விள நீர்குளிர் பூம்பொழிற் கொம்புக்கின்ப, முலைவைத்த தொக்குங் கமலேசர் வேணி முகிழ்நகைவெண், டலைவைத்த வேனற் புனமொக்குங் கங்கையத் தண்புனத்தி, னிலைவைத்த மாதளை யொக்குங் கவணொக்கு நீள்பிறையே. ௨௬

ஆசிரியவிருத்தம்.

பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின் பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம் பென்னக், கறையொழுகும் படவரவம் படரும் வேணிக் கண்ணுதலார் கமலையிற்பைங் கமலை போல்வீர், நறை

யொழுகு மலர்ப்பொழில்குத் தகையாத் தந்தீர் நா
ளிரண்டு மாவடுவு நாடிக் காணே, ளிறையொழு
கு மிளநீரு நிற்கக் காணே ளீர்செய்தகாரியமென்
னிகழ்த்து வேனே. (உஎ)

நேரிசையாசிரியப்பா.

வேனிலா னுறுப்பின் மென்றசை யிறைச்சி
தீநாக் கறியத் திருக்கண் டிறந்தோய்
நான்மறை முனிவன் கான்மூளை நிற்ப
விடற்கரும் பாசத்தொ டுடற்பொறை நீங்க
வுயிருண்கூற் றுக்குத் திருவடி வைத்தோய்
கருங்கடல் வண்ணன் வெள்விடை யாகி
யடிக டாங்கிய வுதவிக் காங்கவன்
முழுவென்பு சுமந்த கழுமுட் படையோய்
தேவா சிரயன் றிருக்கா வணத்து
மேவா நின்ற விண்ணவர் குழாங்க
ளுருத்திர கணங்களென் றேடினர் வணங்கி
யருக்கிய முதல வகனமர்ந் தளிப்ப
வித்தலத் துற்றவ ரினித்தலத் துறுவொனக்
கைத்தலத் தேந்திய கனன்மழு வுறழு
மழுவுடைக் கைய ராகி விழுமிதின்
மாந்தர் யாவருங் காந்தியிற் பொலியும்
வரமிகு கமலைத் திருநகர்ப் பொலிந்தோ
யெழுதாக் கிளவியின் மொழியெனப் படுதலி
னின்பெருந் தன்மை நீயே நவிற்றுதன்
மன்பெரும் புலமைத் தன்றே யும்பரி
னின்றோ ரன்ன ரின்மையி னின்னிலை

கூறுய் நீயெனிற் றேறுந ரிலராற்
றன்னுடை யாற்றன் றூன்றோர் றுன்னர்த்
தற்புகழ் கிளவியுந் தகுமென் றம்ம
நிற்புகழ்ந் திசைத்தனே நீயே யாக
விருடீர் காட்சிப் பொருடெணிந் துணர்த்தா
தியங்கா மரபி னிதுவிது பொருளென
மயங்கக் கூறுதன் மாண்புடைத் தன்றே
யளவில் காட்சியை யையமின் றுணர்த்தலிற்
றளரா நிலைமைத் தென்ப வென்றலிற்
றன்னுடை மயக்கந் திசைமேல் வைத்துச்
சென்னெறி பிழைத்தோன் றிசைமயங் கிற்றென
மொழிகுவ தேய்ப்ப முதுக்குறை வின்மையிற்
பழமறை மயங்கிற் றென்று முழுவது
மெய்யா திசைக்குதும் போலு
மையநின் றன்மை யளப்பரி தெமக்கே. (உஅ)

நேரிசைவெண்பா.

அள்ளற் கருஞ்சேற் றகன்பணைசூ ழாரூரா [ருவாய்
வெள்ளப் புனற்சடைமேல் வெண்டிங்கள்-புள்ளூ
நண்ணிலா தாரை நகைக்கு நகையையன்றோ
தண்ணிலா வென்னுஞ் சகம். (உகூ)

கட்டளைக்கலித்துறை.

தண்மல ரும்பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற, வொண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவன், பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாபச்சை மால்சிவந்த, கண்மலர் சாத்தியுங் காண்பரி தான கழன்மலரே. (௩௦)

## ஆசிரியவிருத்தம்.

மல்லல்வளங் கனிந்தபுகழ்க் கமலேசர் திருவுருவும் வாமபாகத், தல்லமர்பைங் குழலுமையா டிருவுருவு மிருவருக்கு மமுத மான, கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவு மருவுருவாங் குணங்கண் மூன்று, நல்லுருவா தலினன்றே விவரகில காரணராய் நவில்கின் றுரோ. (௩௧)

## நேரிசையாசிரியப்பா.

நவமணி குயின்ற நாஞ்சில்சூழ் கிடக்கு
முவளகங் கண்ணுற் றுவாக்கட லிஃதெனப்
பருகுவா னமைந்த கருவிமா மழையுஞ்
செங்கண்மால் களிறுஞ் சென்றன படிய
வெங்கண்வா ளுழவர் வேற்றுமை தெரியார்
வல்விலங் கிடுதலின் வல்விலங் கிதுவெனச்
செல்விலங் கிடவெதிர் சென்றனர் பற்றக்
காக பந்தரிற் கைதிமிர்த் தெழுந்து
பாகொடு முலாவிப் படர்தரு தோற்ற
நெடுவேல் வழுதி நிகளம் பூட்டிக்
கொடுபோ தந்த கொண்டலை நிகர்க்குஞ்
சீர்கெழு கமலைத் திருநகர் புரக்குங்
கார்திரண் டன்ன கறைமிடற் றண்ணன்
மூவரொன் றெண்ணநின் முதற்றொழில் பூண்டு
மேவலிற் செய்துமென் றெண்ணு ராகி
யடங்கா வகந்தைக் கறிவெலாம் வழங்கி

யுடம்பு வேறு யுயிர்ப்பொறை சுமந்து
நாளு நாளு நேடினர் திரிந்துங்
காணு தொழிந்தனை நிற்கநா ணுதி
[illegible]ரு மிறைஞ்ச விறுமாப் பெய்துபு
[illegible] றிருக்குஞ் சிலர்பிறர் தவத்தினு
[illegible] பநந் தொண்டரொ டிகலிமற் றுன்னொடும்
[illegible] நிறம் பூண்ட பதகனே யெனினு
[illegible] பாத நேர்வரக் கண்டு
[illegible]றின னேனும் புகழ்பெற் றிருத்தலி
னிமையா முக்கணெங் தாய்க்கு
நமனார் செய்த நற்றவம் பெரிதே. (௩௨)

## நேரிசைவெண்பா.

நற்கரும்பு முக்கட் கரும்பென்னு நங்கைமீர்
விற்கரும்பன் கைக்கரும்போ வேம்பென்னுஞ்-சொ
வாமக் கரும்பு மனைக்கரும்பா மாரூரா [ற்கரும்பின்
காமக் கரும்புங் கரும்பு. (௩௩)

## கட்டளைக்கலித்துறை.

கரும்புற்ற செங்நெல் வயற்கமலேசர்கண் டார்க்
குமச்சங், தரும்புற்றி னிற்குடி கொண்டிருங் தார
து தானுமன்றி, விரும்புற்று மாசுணப் பூணணிங்
தார்வெவ் விடமுமுண்டார், சுரும்புற்ற கார்வளைத்
தோகைபங் கான துணிவுகொண்டே. (௩௪)

## ஆசிரியவிருத்தம்.

கொண்டலை யலைத்தபல தண்டலை யுடுத்தழகு
கொண்டகம லைப்ப தியுளார்க், கண்டபி னெனக்கி
தழி தந்தன ரெனப்பசலை கண்டுயிர் தளிர்த்த மட
வா, ளண்டரமு தொத்தவமு தந்தனையி ருட்கடுவி
தன்பாருண் மிச்சில் கொலெனு, வுண்டிடு முளத்தி
லவ ருண்குவரொன் மிச்சிலென வுண்டதை மறுத்
து மிழுமே. (கரு)

## நேரிசையாசிரியப்பா.

உமிழ்தேன் பிலிற்று மொள்ளிணர்க் கூந்த
லமிழ்துகு மழலை யம்மென் றீஞ்சொற்
சில்லரித் தடங்கண் மெல்லிய லொருத்தி
வரிசிலைத் தடக்கைக் குரிசின்மற் றொருவன்
பொன்னெடு மார்பிற் பொலன்கல னிமைப்பத்
தன்னுருத் தோற்றந் தரிக்கலள் வெகுண்டு
மாலா யினனென வணங்கினை யிரத்தலிற்
றேலா மொழியை வாழிய பெரிதெனப்
புலந்தன ளொழுதலுங் கலங்கினன் வெரீஇக்
கண்மலர் சிவப்ப மெய்பசப் பெய்தலிற்
றானு மாலாந் தன்மையள் கொல்லெனத்
தேறினன் றாழ்ந்து சிலம்படி திருத்திப்
பஞ்சியிற் பொலிந்த குஞ்சிய னிரப்பக்
கூடின ளல்லள் கூடா ளல்லள்
கைம்மிகு சீற்றமுங் காதலு மலைப்ப

வெள்ளப் புணர்ச்சியின் வேட்கையுள் ளடக்கி
யுள்ளப் புணர்ச்சிய ளூடின ணிற்பது
தாதவிழ் தெரியற் சாக்கியர் பெருமான்
காதலுட் கிடப்பக் கல்லெறிந் தற்றே
யித்திற மகளி ரிளைஞரொ டாடு
நித்தில மாட நீண்மறு குடுத்தமைம்
மாமுகி றவழு மணிமதிற் கமலைப்
பெம்மா னருமைப் பெருமா ளாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
வுண்டமிழ் தீநீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே. (௩௬)

### நேரிசைவெண்பா.

தம்மேனி வெண்பொடியாற் றண்ணளியா லாரூரர்
செம்மேனி கங்கைத் திருநதியே - யம்மேனி

மானே யமுனையந்த வாணிநதி யுங்குமரன்
முனே குடைவேந் தனித்து. (௩எ)

கட்டளைக்கலித்துறை.

தன்னொக்குஞ் செல்வக் கமலைப் பிரான்செஞ் சடாடவிமற், றென்னொக்கு மென்னி லெரியொக்குங் கொன்றை யெரியிலிட்ட, பொன்னொக்கும் வண்டு கரியொக்குங் கங்கையப் பொன்செய்விக்கு, மின்னொக்கும் பொன்செய் கிழக்கொல்ல னொக்குமவ் வெண்பிறையே. (௩அ)

ஆசிரிய விருத்தம்.

வெண்ணிலவு கொழித்தெறிக்குஞ் செஞ்சடைமோ லியர்வீதி விடங்க ராரூர்க், கண்ணுதல்பொற் புயவரைசேர் தனவரைக ளிரண்டவற்றுட் கனகமேரு, வண்ணல்புய வரைக்குடைந்து குழைந்துதலை வணங்கிடுமெம் மன்னை பார, வண்ணமுலைத் தடவரையவ் வரைகுழையப் பொருவதல்லால் வணங்கி டாதே. (௩கூ)

நேரிசையாசிரியப்பா.

வண்டுகூட் டுண்ண நுண்டுளி பிலிற்றித்
தண்டே னுறைக்குந் தடமலர்ப் பொதும்பரின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்குப்

பழுக்காய் தூக்கும் பச்சிளங் கமுகிற்
செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறித்
தலைவிரித் தென்னக் கிளைதொறும் பணைத்து
மறிந்துகீழ் விழுந்த நறுந்துணர்க் கொடிக
ணாற்றிசைப் புறத்து நான்றன மடிந்து
தாற்றிளங் கதலித் தண்டினிற் படரவப்
பைங்குலைக் கமுகிற் படர்சிறை விரித்தொரு
கண்செய் கூந்தற் களிமயி னடிப்ப
நெடுந்தாண் மந்திகள் குடங்கையிற் றூக்கி
முட்புறக் கனிக டாக்கக் கொட்புறும்
வானர மொன்று வருக்கைத் தீங்கனி
தானெடுத் தேந்துபு தலைமேற் கொண்டு
மந்திக டொடர மருண்டுமேற் றந்தப்
பைந்துணர்க் கொடியிற் படர்தரு தோற்றம்
வடஞ்சூழ்ந்து கிடந்த நெடும்பெருங் கம்பத்
தணங்கனு ளொருத்தி யாடின னிற்பப்
பெரும்பணை தாங்கி மருங்கினர் கொட்டக்
குடந்தலைக் கொண்டொரு கூன்கழைக் கூத்தன்
வடந்தனி னடக்கும் வண்ணம தேய்க்கும்
பூம்பணை மருதத் தீம்புனற் கமலைத்
திருநகர் புரக்குங் கருணையங் கடவு
ளன்பெனு மந்தரத் தாசைநாண் பிணித்து
வண்டுழாய் முகுந்தன் மதித்தனன் வருந்த
வருட்பெருங் கடலிற் றோன்றி விருப்பொடு
மிந்திரன் வேண்ட வும்பர்நாட் டெய்தி

மறைமலையடிகள் நூல்
MARAIMALAI ADIGAL

யக்தமி ழிருவொடு மரசவற் குதவி
யொருகோ லோச்சி யிருநிலம் புரப்பான்
றிசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்ற
முசுகுந் தனுக்கு முன்னின் றுங்குப்
பொன்னுல கிழிந்து புடவியிற் றேன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென
மேவர வழங்குமான் மன்ற
யாவிரு கமர்கா ளிறைஞ்சுமின் னீரோ. (சo)

## திருவாரூர்நான்மணிமாலை

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

குமரகுருபரசுவாமிகள் திருவடிவாழ்க.